


KAMPARMALAI SCHOOL ALUMNI ASSOCIATION - UNITED KINGDOM.

# பூபாள ராகங்கள் - 2000

## 05 .08 .2000

யாழ்/ கம்பர்மலை
அரசினர் தமிழ்க்
கலவன் பாடசாலை
(கொம்மந்தறை)
பழைய மாணவர் சங்கம்
(ஐக்கிய இராச்சியம்)

# Royal Jewelry

SML

உங்கள் எண்ணங்கள் எங்கள் கைவண்ணத்தில்



* மனம் கவரும் தங்க நகைகள்

*தங்கம் - கரட் உத்தரவாதம்

*தாலி - பொன்னுருக்கல் வசதிகள்

*உங்கள் தேவைகளுக்கேற்ற வண்ண நகைகள் பிரத்தியேகமாய் தயாரிக்கும் வசதிகள்

* சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின மோதிரங்கள் ஓடர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்

புன்னகைக்கு நிகர் எங்கள் பொன்னகையன்றோ!

## றோயல் ஜுவல்ரி

**287, HIGH STREET NORTH , EAST HAM,**
**MANOR PARK, LONDON E12 6SL**

**Tel: 0208 472 5500**

**Fax: 020 8472 5687**

உங்கள் தேவையே எங்கள் சேவை.

# KAMPARMALAI SCHOOL ALUMNI ASSOCIATION - U.K

Proudly Presents

# *POOPALA RAGANGAL - 2000*

# பூபாள ராகங்கள் - 2000

*5th August 2000, Saturday*

**Chief Guest**

**C.Selvarajah LLB.LL.M (London)**

Conservative Councillor, Acarb Solicitor

## Guest of Honours

**Thiru S.Thiruchelvam**

Commissioner of Oaths
Editor in Chief, Tamils Information
Senior Settlement Counsellor - CCS

**Kampavaruthi E.Jeyaraj**

(Organiser - All Ceylon Kampan Kazlakam)

**Thamilaruvi T.Sivakumaran B.A(Hons)**

(Organiser, Karainagar Kampan Kazlakam)

*Winston churchill Hall*
*Pinn way, Ruislip, London, U.K.*

# பாடசாலைக் கீதம்

கம்பர்மலையில் தமிழ் வித்தியாலயம்
காசினியெங்கும் புகழ்ந்திட வாழீ
கலை கல்வி ஓங்கி கவின் குணம் தாங்கி
நம் வண்ணச் சிறார் என்றும் வாழ்வு செழிக்கவே.
(கம்பர் மலையில் ...)

மாதா மனோன்மணி அருள் காக்க
ஓதி உணர்த்தும் குரவர் வாழ்க
மேதாவிகளை மெவி நிற்கும் தீங்கு
வீங்கு புகழ் பெறவே.
(கம்பர் மலையில் ...)

மருத நிலமது மாண்புடன் ஓங்கவே
வருவிருந்தோம்பிடும் மக்கள் சிறார்
பெருமைகள் பெற்றிடப் பேறுகளெய்தவே
அருள் நிதி ஆலயமே.
(கம்பர் மலையில் ...)

ஆக்கியோன்:
சங்கீத பூஷணம், மிருதங்க வித்துவான்
அமரர் கந்தையா சங்கரசிவம்
முன்னாள் சங்கீத ஆசிரியர் கம்பர்மலை அ.த.க.பாடசாலை.

# நிகழ்ச்சி நிரல்

* மங்கள விளக்கேற்றுதல்

* கொடியேற்றல்

* தமிழ் மொழி வாழ்த்து

* வரவேற்புரை: திரு.ம. சுதாகரன் (விழா அமைப்பாளர்)

* தலைமை உரை: திரு.இ. இரகுநாதன்
(தலைவர், பழைய மாணவர் சங்கம் , ஐக்கிய இராச்சியம்)

* சிறப்புரைகள்:

1. திருமதி. இ.துரைராஜா
(ஓய்வு பெற்ற ஆசிரியை யாழ்/கம்பர் மலை அ.த.க பாடசாலை)
2. Dr. பூ. இராசையா
(பொருளாளர், பழைய மாணவர் சங்கம், ஐக்கிய இராச்சியம்)

* விருந்தினர் உரைகள்:

1.கவுன்சிலர். சி. செல்வராஜா (பிரதம விருந்தினர்)
2. திரு. எஸ். திருச்செல்வம் (சிறப்பு விருந்தினர், கனடா)
3. தமிழருவி. த. சிவகுமாரன் (சிறப்பு விருந்தினர் - ஈழம்)

* பாடசாலைக் கீதம் இசைத்தல்


## நிகழ்வுகள்

1. நாட்டியக் கலையரங்கம்.

* ஐரோப்பாவின் முன்னனி நடன ஆசிரியை திருமதி. ராகினி ராஜகோபால் அவர்களின் நாட்டியாலயா நடனப் பள்ளி மாணவிகள்.

**1) புதிய படைப்பு:**

ரீனா சந்திரமோகன்
கவிதா சத்திய மூர்த்தி
லக்ஷிகா கிருஷ்ணபிள்ளை
லவண்யா பாலச்சந்திரன்
பிரியா றங்கன்
வித்தியா சோமநாதக்குருக்கள்



**2) கோலாட்டம்**

வித்தியா சோமநாதக்குருக்கள்
மாதவி உதயணன்
ஜெகீதா செல்வராஜா
பவித்திரா ராஜமோகன்
ரம்மியா சிறீஸ்கந்தராஜா
றோஸ் மேரி றிச்சாட்
சுவேதிகா சிறீ
துஷ்யந்தினி வைத்தியலிங்கம்

**3) தில்லானா:**

சுபீதா பத்மநாதன்
லிண்டா சண்முகநாதன்
நர்மதா முருகதாஸ்
ரீனா அமர்லால்
தமிழினி குலேந்திரன்
சுகுணா விஜயகுமார்
ரூபி கனகரத்தினம்
றோஸ் மேரி றிச்சாட்

**4) சுட்டும் விழி...**

ஜனனி தேவபாலன்
ரீனா அமர்லால்
சுபா யோகசங்கரி
நர்மதா முருகதாஸ்
லிண்டா சண்முகநாதன்
யசோ ஜெயக்குமார்
லலிதா ஜெயக்குமார்
சோபிதா பத்மநாதன்
தமிழினி குலேந்திரன்
சுகுணா விஜயகுமார்

**5) மணிப்புரி:**

ரீனா சந்திரமோகன்
ஹிரால் பட்டேல்
கவிதா சத்திய மூர்த்தி

**6) ராத கிருஷ்ண நடனம்:**

ஜனனி தேவபாலன்
சுபாயோகசங்கரி

## 2. "வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள் " சிறுவர் நாடகம்

தமிழ் நாடக உலகில் உன்னதமான ஒருநிலையில் இருந்து வரும் லண்டன் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் தயாரிப்பில் பிறென்ற் தமிழ்ச் சங்க பாடசாலை மாணவர்கள்

<u>**மேடையில் ......**</u>

**கதை கூறுவோர்:**

தனுஷியா ஜீவேந்திரா
கவிதா மகேந்திரன்
சிவராஜன் விக்கினேஸ்வரராஜா

**வேடர் தலைவன்:**

தயாளினி தனபாலசிங்கம்

**வேடர்கள்:**

யசிந்தன் பிரபாகரன்
சிவந்தன் பிரபாகரன்
கிருஷாந்த் முருகதாஸ்
பிரஷாந் முருகதாஸ்
ரதிகா ருத்ரா

**அப்பா புறா:**

மானசி பாலேந்திரா

**அம்மா புறா:**

மகலி விஜயகுமார்

**பிள்ளை புறாக்கள் :**

சிந்து பசுபதி
ஹிந்துஷா கீர்த்திகுமார்
கபிலா ருத்ரா
ரிவீணா ஜோதிபால்
பிருந்தா பிரபாகரன்
கிருஷாந்தி கீர்த்திகுமார்

**சிறுவர்கள்:**

கோபிகன் பத்மநாதன்
பிரபு முகுந்தன்
கபிலன் ருத்ரா
பிரசன்னா ஜோதிபால்
லோகன் வாசுதேவா
குமார் வாசுதேவா

**மேடையின் பின் ...**

**பாடகர்கள்:**

விஜயகுமாரி பரமகுமாரன்
கவிதா வேந்தன்
ஆனந்தராணி பாலேந்திரா
க.கிருஷ்ணராஜா
ச.வாசுதேவன்

**ஹார்மோனியம் /சுரத்தட்டு இசை நிர்வாகம்:**

ஆ. வேந்தன்

**தாள வாத்தியம்:**

நாதமணி முத்துசிவராஜா

ரமணன்

**மேடையமைப்பு , ஒப்பனை, உடைவண்ணம்:**

க.கிருஷ்ணராஜா

**இசையமைப்பு:**

தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகம்

**பிரதியாக்கம்:**

பேராசிரியர் சி.மௌனகுரு

**நடன / கூத்து அமைப்பு, உதவி நெறியாள்கை:**

ஆனந்தராணி பாலேந்திரா

**ஒளியமைப்பு, நெறியாள்கை:**

க. பாலேந்திரா

## இடைவேளை 8.30 - 9.00

3. பட்டிமண்டபம்

**சமூக வாழ்வியலில் பெரிதும் மேம்பாட்டை ஏற்படுத்துவது காதல் திருமணங்களா?**

**பெற்றோர் நிச்சயித்துச் செய்யும் திருமணங்களா?**

**நடுவர்:**

**கம்பவாருதி இ.ஜெயராஜ்** (அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர்)

**காதல் திருமணங்களே !**

கவிஞர் க. இராஜமனோகரன் (பொறியியளாலர்)

திரு. சு.சிறீகாந்த லிங்கம் (சட்டத்தரணி)

**பெற்றோர் நிச்சயித்துச் செய்யும் திருமணங்களே:**

தமிழருவி த.சிவகுமாரன் (கரைநகர் கம்பன் கழக அமைப்பாளர்)

திரு. ச. சிறீ ரங்கன் (ஒலிபரப்பாளர், சன்றைஸ் வானொலி)

⁎ **நன்றியுரை:**

திரு.எஸ்.குணேசலிங்கம் (உபசெயளாளர், பழைய மாணவர் சங்கம், ஐக்கிய இராச்சியம்)

4. " ஷ்ருதிலய சங்கமம் இன்னிசை நிகழ்வு"

லண்டன் முன்னணி இசைக்குழு சித்ராலயா

நிகழ்ச்சித் தொகுப்பு

**ஆனந்தராணி பாலேந்திரா** **மகாலிங்கம் சுதாகரன்**

# மலர் ஆசிரியரின் சிந்தனையில்.....



யாழ் கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளை முதல் முறையாக லண்டன் மாநகரில் நடாத்துகின்ற "பூபாள ராகங்கள்— 2000" விழாவுக்கு "பூபாள ராகங்கள்" மலரின் ஆசிரியன் என்ற வகையிலே எல்லோரையும் வரேவற்கும் இவ்வேளையில் சில கருத்துக்களையும் இம்மலரில் வெளிக் கொணர்வது என் தார்மீக கடமையாகும்.

சிறியோன் ஆகிய நான் இம்மலருக்கு ஆசிரியனாக இருப்பது என் அதிஸ்டமோ! என் பாடசாலை எனக்கு கற்றுத் தந்த துணிவோ!! என்று ஒரு கணம் சிந்திக்கிறேன். எனவே இம்மலரில் காணும் சொற்குற்றம் பொருட்குற்றம் எக்குற்றமெனினும் நற்குற்றமென கருதி மன்னிப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

என்னைப் போன்ற பல பழைய மாணவர்கள் சேவையாளர்களாக மாற வேண்டிய தேவை ஏற்பட காரணமாகியதே எமது பாடசாலைதான். ஏனெனில் எமது பாடசாலைக்கு எவ்வளவோ தேவைகள் உள்ளது. அந்த தேவைகளை நாம் சேவையாளர்களாக மாறினாலே தீர்க்க முடியும் என்பதை நாம் மாணவர்களாக இருக்கும் போதே நன்கு அறிவோம்.

அந்த வகையில் 1993இல் குறிப்பிட்ட சில பழைய மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை பழைய மாணவர் சங்கமானது வடமராட்சி வலயத்தில் தலை நிமிர்ந்து நிற்பதை அறிந்து அதன் அமைப்பாளர்களில் ஒருவன் என்ற வகையில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். சுமார் 5 வருடங்கள் பாடசாலை பழைய மாணவர் சங்க வளர்ச்சியில் பங்கெடுத்த நான் தற்போது பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையின் வளர்ச்சியில் பங்காற்றுவது மகிழ்ச்சி தான்.

எமது பாடசாலை எமக்கு கொடுத்த கல்விப் பிச்சை என்றும் அடைக்க முடியாதது தான். எனினும் தொடர்ந்தும் அது தன் பணியை செய்வதற்கு எமது ஆதரவும், ஒத்துழைப்பும் மிக மிக அவசியமாகிறது.

எமது பாடசாலையின் தோற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் நம் ஊர்ப் பெரியார்கள் எவ்வாறு பங்காற்றினார்களோ, அவ்வாறே எம் பாடசாலையின் மைந்தர்களாகிய நாம் இப்புத்தாயிரம் ஆண்டில் காலத்தின் தேவையை உணர்ந்து பங்காற்றுவோமாக.

மாணிக்க விழா கொண்டாட வேண்டிய காலத்தை கடந்து பொன் விழாவை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் வளர்ச்சியில் அனைத்து பழைய மாணவர்களும் பங்காற்ற வேண்டும். பார்வையாளர்களாக வெளியில் இருந்து ஏளனம் செய்வதை தவிர்த்து பங்காளிகளாக மாறி எமது பாடசாலையின் புகழ் இன்னும் பல்லாண்டு நிலைக்க அனைவரும் ஒன்றிணைவோம்.

*1997* இல் பாடசாலையில் பழைய மாணவர் சங்கத்தால் சிறப்பாக நடாத்தப்பட்ட "பூபாள ராகங்கள்" நிகழ்வு அங்குள்ள சூழ்நிலை காரணமாக தொடர்ந்து நடக்காவிட்டாலும் *2000* இல் லண்டனில் அரங்கேறுவது மட்டற்ற மகிழ்ச்சிதான். இந்நிகழ்வின் மூலம் பாடசாலை மேலும் மேலும் வளர பாடசாலையுடன் இணைந்த கொம்மந்தறை மனோன்மணி அம்பாளும் காத்தற் கடவுளாம் நெற்கொழு வைரவப் பெருமானும் அருள் பாலிப்பார்களாக!

பெருகட்டும் நும் ஆதரவு!
வளரட்டும் சங்கத்தின் பணி!!
ஒளிரட்டும் பாடசாலையின் பெயர்!!!

தமிழினத்தின் அன்றைய தேவையுணர்ந்து பாடசாலையின் தோற்றத்திற்கு வித்திட்ட ஊர்ப் பெரியவர்களுக்கும் அதன் வளர்ச்சிக்கு அயராது உழைத்து அமரத்துவம் அடைந்த அதிபர்கள் ஆசிரியர்களுக்கும் மற்றும் அதன் வளர்ச்சியில் பங்கு கொண்டு அமரத்துவம் அடைந்த சேவையாளர்களுக்கும் தேசத்தியாகிகளாய் உயிர்நீத்த மாணவர்களுக்கும் இம் மலரை காணிக்கையாய் சமர்ப்பிக்கின்றேன்.

**நன்றி!**
**மகாலிங்கம் சுதாகரன்**
**விழா அமைப்பாளர்**

J. KAMPARMALAI G.T.M.S. UK ESTD. 1997 ALUMNI ASSOCIATION

# SUBAJINI VIDEO MOVIES









உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான
வைபவங்களையும் மேடை நிகழ்ச்சிகளையும் தரமான முறையில்
வீடியோ படமாக்கவும், புகைப்படம் பிடித்திடவும் மேற்கு லண்டனில்
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான நிறுவனம்

## SUBAJINI VIDEO MOVIES
## PHOTOGRAPHY


உங்கள் விருப்பத்திற்கேற்ப வீடியோ படப்பிடிப்பும்
எடிட்டிங் பாடல் பதிவும் செய்து தரப்படும்.

**நம்பிக்கை ! நாணயம்!! நல்ல தரம்!!!**

தொடர்புகட்கு: சுபாஜினி வீடியோ மூவிஸ்.

**Tel: 07932 723137 / 07939115387**

**020 8756 0637**



கடந்த வருடம் அகில இலங்கை மட்டத்தில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் கலந்து கொண்டு எமது பாடசாலைக்குப் புகழ் சேர்த்த மாணவி செல்வி.பிரமியா சிவபாதகுணம் அவர்களுக்கு லண்டன் பழைய மாணவர் சங்க கிளையின் அனுசரணையில் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தால் பாராட்டு விழா நடாத்தப்பட்டது. அவ்விழாவில் செல்வி பிரமியாவுக்கு வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இராஜேந்திரன் அவர்கள் தங்கப் பதக்கம் அணிவிப்பதை படத்தில் காணலாம். பிரமியா பாடசாலையின் சிரேஸ்ட மாணவ தலைவியும் கம்பன் இல்லத்தின் சிறந்த விளையாட்டு வீராங்கனையுமாவார். இவர் கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த.(சா/த) பரீட்சையில் 8D , 2C என்ற சிறந்த பெறுபேறு பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.



*1997 ஆம் ஆண்டு பாடசாலை பழைய மாணவர் சங்கத்தால் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்ட பூபாள ராகங்கள் — 97 நிகழ்வின் வீடியோ பிரதிகள் விற்பனை மூலம் லண்டன் வாழ் பழைய மாணவர்களிடம் பெறப்பட்ட £500.00 களில் ரூபா 25000/— பாடசாலை அதிபர் திரு. மு.அனந்தேஸ்வரன் அவர்களிடம் பழைய மாணவர் சங்க பொருளாளர் திரு.ச.செந்தூரன் அவர்களால் பாடசாலை சாரணிய இயக்கத்தின் தேவைகளுக்காக வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம் இது. மிகுதி பணம் பாடசாலையில் சிறுவர் பூங்கா ஒன்று அமைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த £500.00 மகாலிங்கம் சுதாகரன் அவர்களால் வீடியோ பிரதிகள் விற்பனை மூலம் பிரத்தியேகமாக சேகரித்து அனுப்பப்பட்டது.*

**ஞாயிறு தினக்குரல் 28th May 2000.**

# வைரமாளிகை

## Diamonds Palace

மங்கையர்க்கு எழில் சேர்க்க
வைர மாளிகை
புதுப் பொலிவுடன் நிதம் பரவ
வைர மாளிகை
பொன்னகைக்கு மறுபெயர் தான்
வைர மாளிகை
மண்ணுலகில் மயன் படைத்தான்
வைர மாளிகை
ஆமாம் செல்லும் இடமெல்லாம்
இதே பேச்சு



**வைரமாளிகை தரும் விசேட அறிவித்தல்**
உங்கள் திருமணத் தாலி
மிக மிக விசேட மலிவு விலையில்.
கல் அட்டியல் - கல் நெக்லஸ்
ஒரு கிராம் விலை £7.39 + VAT

ரூட்டிங் புதிய Sainsbury க்கு முன்பாக

# Diamonds Palace

**Open 7 Days a Week**

To capture the classic beauty, the sheer romance of a style,
visit Diamonds Palace
and see the most desirable, exquisite
Traditional and Modern Jewellery

**76 Tooting High Street, Tooting, London SW17 0RN**
**Tel: 020 8767 5333 Fax: 020 8767 5814**

# இரத்தினம் நகைமாளிகை

# Ratnam Jewellers

நியூமோல்டனில் ஒரு புதிய தமிழர் நகைமாளிகை



நவரத்தினங்களின் பொக்கிஷம்
தங்க நகைகளின் தனி இடம்,
தரத்தின் முதலிடம்
நம்பிக்கைக்கு ஒரே இடம்

**RATNAM JEWELLERS**

( குறிப்பிட்ட அதிஉயர்நத நவீன பட்டு சேலைகளும் கைவசம் உண்டு.)

இலண்டன் மட்டுமல்ல பிரித்தானியா மற்றும் ஏனைய ஐரோப்பாவில் வாழும் ஒவ்வொரு தமிழரும் நிச்சயம் விஜயம் செய்ய வேண்டிய ஒரு தரமான தமிழர் நகை மாளிகை.

தெரிந்தெடுக்க ஆயிரக்கணக்கான எழில்மிகு தங்கநகைகள்.
தராதர சான்றிதழ் பெற்ற வைர நகைகள்
மனம் கவரும் நவரத்தினக் கல் நகைகள்

எம்மிடம் எப்போதும் 50,000 கிறாமிற்கு அதிகமான தங்கநகைகள் கைவசம் இருக்கும். தெரிந்தெடுக்க கவலையே வேண்டாம்.

வியாழன், வெள்ளிக் கிழமைகளில் உங்கள் வசதிக்காக மாலை 8.30 மணிவரை திறந்திருக்கும்.

## Ratnam Jewellers

**84 BURLINGTON ROAD, NEWMALDEN, SURREY KT3 4NT.**
www.ratnamjewellers.com

## TELEPHONE: 020 8942 9425

# SELVARAJAH & CO.
## SOLICITORS

WE SPECIALISE IN VARIOUS AREAS OF LAW AND PARTICULARLY IN

* IMMIGRATION
* WELFARE BENEFITS
* HOUSING MATTERS
* CRIMINAL CASES

**WE ALSO DEAL WITH**

EMPLOYMENT, MATRIMONIAL (DIVORCE CHILDREN ETC.,)
PERSONAL INJURY, CONVEYANCING, SHOP LEASES,
POLICE STATION WORK.

WE HAVE BEEN APPROVED BY THE LEGAL SERVICES COMMISSION AS A FIRM PROVIDING QUALITY SERVICE AND WE HAVE BEEN AWARDED. FRANCHISE IN VARIOUS CATAGORIES OF LAW.

**WE HAVE VERY SUCCESSFUL IN CASES. REFUGEE CASES ARE HANDLED BY EXPERIENCED SOLICITORS.**

***PLEASE CONTACT:***

***C. SELVARAJAH, LL.B; LL.M.(LONDON)***

***OR MRS.C.SELVARAJAH***

# SELVARAJAH & CO.

**SOLICITORS ADMINISTRATORS OF OATHS**

**4HONEYPOT LANE, KINGSBURY,**
**LONDON NW9 9HD.**

TEL: 020 8204 7884 FAX: 020 8204 0104
AFTER OFFICE HOURS 020 8204 3326

யாழ் கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

பழைய மாணவர் சங்கம் பெருமையுடன் வழங்கும்

பூபாள ராகங்கள் - 2000

சிறப்பாக நடைபெற எமது வாழ்த்துக்கள்.

# CHOICE

## GROCERIES & OFF LICENCE

***30, New Broadway***

***Hillingdon***

***Middlesex UB10 0LL.***

***Tel 01895 256180***



*With the best Compliments*

*For "Poopala Ragangal - 2000"*

*from*

*CHOICE*

# LAKSHMIS

## JEWELLERS & SILK HOUSE

House of fine Jewellery

East Ham மஹாலக்ஷ்மி ஆலயமருகே



பிரமிக்கத்தக்க
அழகுக்
காட்சியறையில்
திருமண
வைபவத்திற்குத்
தேவையான
வைரத்தாலிக்கொடி
முதல்
பட்டுச் சேலைகள்
வரை ஓரிடத்தில்
பெற்றுக்
கொள்ளக்கூடிய
முதலாவது தமிழர்
களஞ்சியம்



## லக்சுமீஸ் ஜுவலர்ஸ்

**276 High Street North, East Ham E12 6SA**

**Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448**

**Opening Hours: Mon - Sun 10.30am - 7.00pm**

தரம்! தெரிவு!! மலிவு!!!

Tax free for overseas visitors.

# தங்க மாளிகை

TM

இலண்டனில் மங்கையருக்கு
ஒரு மாளிகை தங்க மாளிகை



## Thanga Maligai

**276 Lewisham High Street,**
**London SE13 6JZ**

**Tel: 020 8690 3686   Fax: 020 8690 4157**

செவ்வாய் - ஞாயிறு காலை 10.30மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை திறந்திருக்கும்.

# அதிபரின் வாழ்த்துச் செய்தி



யா.கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியக் கிளை மிகவும் குறுகிய காலத்தில் விடா முயற்சியும், செயற்றிறனும் மிக்க பழைய மாணவர் சங்க தாய்ச் சங்கத்தினூடாக பாடசாலைக்கு பல வழிகளிலும் உதவியுள்ளது. பாடசாலைக்கு மிக முக்கிய தேவையாய் இருந்த சுற்று மதில் அமைக்கும் வேலையை முற்று முழுதாக பொறுப்பேற்று செய்து வருகிறது. எமது பாடசாலைச் சமூகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க பாடசாலையில் நூலகம் ஒன்றை நிறுவுவதற்கு தேவையான நிதியை சேகரிக்கும் முகமாக லண்டனில் முதல் முறையாக நடாத்துகின்ற "பூபாள ராகங்கள் — 2000" கலை நிகழ்வு சிறப்பாக நிகழ்வதற்கும் அதனூடாக பாடசாலைச் சமூகம் பயனுறுதி பெறவும், பாடசாலையோடு இணைந்த எல்லாம் வல்ல கொம்மந்தறை மனோன்மணி அம்பாள் அருள் பாலிப்பாராக!

மு.அனந்தேஸ்வரன்,
அதிபர்,
யா/கம்பர்மலை அ.த.க.பாடசாலை.

# பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் ........

*யாழ்/கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியக் கிளை குளிர்மை கொலுவிருக்கும் லண்டன் மாநகரில் முதல் முறையாக "பூபாள ராகங்கள் 2000" நிகழ்வை நடாத்துவதையிட்டு எமது பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினராகிய நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். இந்த நிகழ்வு எமது பாடசாலையில் நூலகம் ஒன்றை நிறுவுவதற்காக நடாத்தப்படுகிறது என்பது எமக்கெல்லாம் இரட்டிப்பு மகிழ்ச்சி. எமது பாடசாலை பழைய மாணவர் சங்கம் 1993 இல் இளைய தலை முறையை சேர்ந்த பழைய மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு பாடசாலைக்கு தேவையான செயற்றிட்டங்களை தன்னால் இயலுமானளவு செய்து வருவதை யாவரும் அறிவீர்கள். வடமராட்சி வலயத்தில் எமது சங்கம் பலம்மிக்க ஒரு சங்கமாக பரினாம வளர்ச்சியடைந்து வருவது உண்மை. இதற்கு எமது சங்கத்தால் 22.05.1997 அன்று வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்ட "பூபாள ராகங்கள் 1997" நிதியுதவிக் கலைநிகழ்வு தக்க சான்றாகும். இந்த நிகழ்வு யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தாலும், மனித நேயமுள்ள அனைத்து தரப்பினராலும் விதந்து பாராட்டப்பட்டது. அவ்வாறே லண்டனில் இடம்பெறும் "பூபாள ராகங்கள் 2000" நிகழ்வும் சிறப்பாக இடம்பெறும் என்பதில் ஐயமில்லை. எமது செயல் வடிவங்களுக்கு பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையூடாக பண உதவி வழங்கும் லண்டன் வாழ் பழைய மாணவர்களுக்கு பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றிகள். இங்குள்ள சூழ்நிலையில் விவசாயக் கிராமமாகிய எங்கள் கிராமத்தில் சந்தைப்படுத்தல் பிரச்சனை காரணமாக நிதி சேகரிப்பது கஸ்டமான வியடம் என்பதை லண்டன் வாழ் பழைய மாணவர்களாகிய நீங்கள் அறிவீர்கள். எனவே பாடசாலையின் வளர்ச்சிக்கு தேவையான நிதியுதவியை வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்களே வழங்கி உதவ வேண்டும் என்றும் பணிவாக வேண்டுகின்றேன்.*

*பாடசாலையுடன் இணைந்து முழு ஒத்துழைப்பையும் வழங்க எமது சங்கம் தயாராக உள்ளது. உங்களின் பண உதவிகளுக்கு எங்கள் சங்கம் உடனுக்குடன் செயல்வடிவம் கொடுக்கும் என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.*

*தொடர்க உங்கள் பணி! வளர்க நம் பாடசாலை!!*
*"எம் கடன் பணி செய்து கிடப்பதே"*

**இரா.அகிலன்**
***பொதுச் செயலர் — பழைய மாணவர் சங்கம்***
***யாழ்/கர்பர்மலை அ.த.க.பாடசாலை***

Mr.S.Thurairajah
Patron

Mr.R.Ragunathan
President

Mr.V.Shanmuganathan
Vice President

Mr.S.Ganeshalingham
Secretary

Mr.S.Guneshalingham
Asst.Secretary

Dr.P.Rasiah
Treasurer

Mr.R.Prabaharan
Asst.Treasurer

Mrs.R.Thurairajah
International Coordinator

Mr.T.Puvaneswaran
PRO:

Committee Members:

Mr.M.Paranthaman

Mr.T.Srimurthy

Mr.R.Balendran

Mr.U.Perinpakumar

Mr.A.Raveendran

Mr.V.Maheswaran

Mrs.K.Niththiyananthan

Mrs.P.Thiyagalingam


## பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளை அமைப்பாளரின் உள்ளத்திலிருந்து.......



எமது மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காகவும், சிரமத்தின் மத்தியில் பல பிரச்சனைகளை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் பாடசாலை களில் ஒன்றான எமது கிராமத்துப் பாடசாலையின் தரத்தினை உயர்த்தும் பொருட்டும், பல இன்னல்களுக்கு மத்தியிலும் ஒரு சிறிய உரு வடிவில் குறிப்பிட்ட செயல் நிலையுடன் இருந்த இப்பாடசாலை பழைய மாணவர் சங்கமானது (ஐ.இ) ஒரு உறுதியான நிலையை இன்று பெற்றுள்ளதன் வெளிக்காட்டுத்தான் இந்த "பூபாள ராகங்கள் — 2000" நிகழ்வு என்பது உண்மை.

தொடர்ந்தும் நாம் வேறுபல வழிகளில் இச்சங்கத்தின் மூலம் எமது பாடசாலை மாணவர்களுக்கு உதவி செய்ய தீர்மானித்துள்ளோம். பல காலமாக தோன்றிய ஒரு கனவு இன்று நனவாவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இன்று எமது பாடசாலையின் வளர்ச்சி மற்றைய உயர் பாடசாலைகளுடன் ஒப்பிடும் அளவிற்கு சிறப்பைப் பெற்றுள்ளது. நான் இப்பாடசாலையின் பழைய மாணவன் என்ற முறையிலும், எமது ஊர்ப்பாடசாலை என்ற முறையிலும் தொடர்ந்து அயராது இப்பாடசாலை மாணவர்களின் வளர்ச்சிக்காக உழைக்க விரும்புகின்றேன்.

எல்லோரும் உங்கள் பாடசாலை என்ற மன நிலையுடன் வருடத்திற்கு ஒரு சிறிய தொகையாவது இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக செலவிட முன்வர வேண்டும். நாம் அனைவரும் இப்பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்களாவோம். எனவே எங்கள் பாடசாலையின் வளர்ச்சியில் பங்கெடுக்க வேண்டியது எங்களின் கடமையாகும்.

இவ்விழா சிறப்புற்று பாடசாலை மேலும் வளர்ச்சியடைய இறைவனை வேண்டுகிறேன்.

நன்றியுடன்

இ.பிரபாகரன்

அமைப்பாளர்— பழைய மாணவர் சங்கம் (ஐக்கிய இராச்சியம்)

# எமது பாடசாலையின் இளைப்பாறிய ஆசிரியர்கள் அன்பான வேண்டுகோள்.....





யாழ் கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளை "பூபாள ராகங்கள் 2000" என்னும் கலை நிகழ்வு ஒன்றினை நடாத்தி தாய் மண்ணில் தமக்கு ஆரம்பக் கல்வியைத் தந்து கல்விக் கண்ணைத் திறக்க வைத்த கல்லூரித் தாய்க்கு நிதி உதவி வழங்கி அவளை வாழ வைக்க முன்வந்துள்ளமையை நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். 1997இல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட ஐக்கிய இராச்சிய கிளை தமக்கு கல்வி ஈந்த அன்னைக்கு பல வழிகளில் கைகொடுத்து உதவி வருகிறது. இதனையிட்டு பிறந்த மண்ணில் எம்மவர் பெருமகிழ்ச்சி அடைகின்றனர்.

எமது கல்விக்கூடம் ஆரம்பத்தில் ஒர் ஓலைக் கொட்டிலில் கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்றும் இன்னோர் பகுதி ஓர் வீட்டில் கொம்மந்தறை இந்து தமிழ் வித்தியாலயம் என்றும் இயங்கி வந்தது. இரு பாடசாலைகளும் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து வந்த கால கட்டத்தில் இரு பாடசாலைகளையும் ஒன்றிணைத்து ஒரு பாடசாலையாக்கினால் கல்விக் கூடம்பெரு வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கையில் ஒன்றிணைக்கப்பட்டது. எதிர் பார்த்தபடி பாடசாலை ஆல் போல் சடைத்து அறுகுபோல் படர்ந்து பனை போல் ஓங்கி விரைவான வளர்ச்சியுடனும், வேகமான மாற்றங்களுடனும் வளர்ந்து வருகிறது. குடிசைகளே பல்கலைக்கழகங்களாகி கலை பல பயிற்றியமை எமது பண்டைய வரலாறு. எமது கல்விக் கூடமும் இத்தகையதே. பல மருத்துவர்கள், இயந்திரவியலாளர்கள். கணக்காளர்கள்.... என பலர் உருவாக வழிவகுத்தது.

இன்று நம் கல்விக்கூடம் அயற்கிராமங்களினுள் வளர்ச்சி பெற்ற பாடசாலைகளோடு சகல துறைகளிலும் போட்டி போடும் நிலையில் வளர்ச்சியடைந்து விட்டதை அறிந்து அன்னையின் பிள்ளைகள் பெருமைப்படுகிறீர்கள் என்பதை நாம் அறிவோம்.

அன்னையின் வளர்ச்சியில் அதிபர், ஆசிரியர்களின் சேவை பெற்றோரின் ஒத்துழைப்பு அளப்பரியது. எமது கல்விக்கூடம் எம் கிராமத்தின் கண். அதைப் பாதுகாக்க வேண்டியது அன்னையின் குழந்தைகளாகிய உங்களின் பொறுப்பும் கடமையும் கூட. பொருளாதார நிலையில் உங்கள் அன்னை மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளாள்.

இப்புத்தாயிரம் ஆண்டில் மாறிவரும் சர்வதேச போக்குகளுக்கேற்ப நம்

சிறார்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு நம் கல்லூரித் தாய்க்கு உண்டு. அதற்கு கைகொடுக்க வேண்டிய பொறுப்பு புலம் பெயர்ந்து வெளி நாடுகளில் பரந்து வாழும் நம் பழைய மாணவர்களைச் சார்ந்தது.

எமது பாடசாலைச் சிறார்களுக்கு அறிவை வளர்க்கும் ஓர் வாசிகசாலை நீண்டகாலத் தேவையாய் உள்ளது. மாணவர்கள் உடுக்கச் சீருடையின்றி, உண்ண தகுந்த உணவின்றி தவிக்கும் பரிதாப நிலை, நாடு தழுவிய ரீதியில் நடைபெறும் போட்டிகளில் பங்கு பற்றி தமது திறமையை வெளிப்படுத்த முடியாத அவலம். இவற்றை கண்டும் கேட்டும் புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர் மௌனமாக இருப்பதா? நமக்குள் பல வேறுபட்ட கருத்துக்கள் இருப்பினும் நம் கல்விக் கூடத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கைங்கரியத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என்று நீண்ட காலமாய் பாடசாலையில் கடமையாற்றியவர்கள் என்ற முறையிலும், பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையின் தற்போதைய காப்பாளர், சர்வதேச ஒருங்கிணைப்பாளர் என்ற முறையிலும் உங்களை உரிமையுடனும் பணிவுடனும் வேண்டிக் கொள்கின்றோம்.

யாழ்/கம்பர்மலை அ.த.க.பாடசாலை நிழலில் உருவாகிய நீங்கள் அதன் தரத்தை உயர்த்தி வலிமைப்படுத்த வேண்டுகின்றோம். நீங்கள் செய்யும் கைங்கரியங்கள் பாடசாலை சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

***கவின்பாடும் கம்பர்மலை கல்விக்கூடம்***
***உங்கள் தவழ்ந்தாடும் புகழைப்பாடும்***
***இளம் தளிர்போல என்றும் தாவும்.***

***திரு.சி.துரைராஜா (காப்பாளர்)***
***திருமதி இ.துரைராஜா (சர்வதேச ஒருங்கிணைப்பாளர்)***



செல்வி.பிரமியா சிவபாதகுணம் அவர்களின் விளையாட்டுத் திறன் நய விழாவில் வடமராட்சி வலய உடற்கல்விப் பணிப்பாளர் திரு.பாலசுப்பிரமணியம் அவர்கள் உரையாற்றுவதை படத்தில் காணலாம்.
**தினகரன், வாரமஞ்சரி , Sunday, May 21,2000**

# KAMPARMALAI SCHOOL ALUMNI ASSOCIATION(U.K)

கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கம்(ஐ.இ)

Kommantharai Valvettiturai Sri Lanka 77 Kings Road, Harrow, Middx HA2 9JG, U.K.



Mr.S.Thurairajah
Patron

Mr.R.Ragunathan
President

Mr.V.Shanmuganathan
Vice President

Mr.S.Ganeshalingham
Secretary

Mr.S.Guneshalingham
Asst.Secretary

Dr.P.Rasiah
Treasurer

Mr.R.Prabaharan
Asst.Treasurer

Mrs.R.Thurairajah
International Coordinator

Mr.T.Puvaneswaran
PRO:

Committee Members:

Mr.M.Paranthaman

Mr.T.Srimurthy

Mr.R.Balendran

Mr.U.Perinpakumar

Mr.A.Raveendran

Mr.V.Maheswaran

Mrs.K.Niththiyananthan

Mrs.P.Thiyagalingam




யாழ் கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியக்கிளை 1997ம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, பாடசாலையின் கல்விசார் சூழலுக்கு பல ஆக்கபூர்வமான சேவைகளை செய்து வருகின்றது. இப் பாடசாலையானது கல்வித் துறையிலும் விளையாட்டுத் துறையிலும் மேலும் மேலும் உயர்ச்சி பெற்றுவரும் இந்நேரத்தில் எமது சங்கம் பல வழிகளிலும் தன்னாலான பண உதவியினை செய்து வருவதையிட்டு பெருமையடைகின்றேன். இந்நேரத்தில் தம்மாலான பண உதவியை எமது சங்கத்திற்கு வழங்கிய பழைய மாணவர்களின் நல்லெண்ணத்தை நினைத்து பார்க்கின்றேன்.

1998இல் நான் தாய் நாட்டிற்குச் சென்ற வேளை பழைய மாணவர் சங்கத்தின் அழைப்பின் பேரில் பாடசாலையில் நடைபெற்ற பாராட்டு விழாவுக்கு சென்றிருந்தேன். அப்போது அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் நிகழ்த்திய உரைகளில் இருந்து எமது பாடசாலையின் வளர்ச்சியையும் அதில் பழைய மாணவர் சங்கத்தின் பங்கையும் நன்கு உணர்ந்து கொண்டேன். 1993இல் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், இளைய தலைமுறையைச் சேர்ந்த பழைய மாணவர்களால் நல்ல முறையில் வழிநடத்திச் செல்லப்படுவதை அறிய முடிந்தது. இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் அதிபரும் ஆசிரியர்களும் பெற்றார்களும் தன்னலமற்ற சேவைகளை வழங்கி வருவதையிட்டு பெருமிதமடைகின்றேன்.

எமது சங்கம் இதுவரை பாடசாலைக்கு அவசிய தேவையாயிருந்த சில வேலைத்திட்டங்களை

Mr.S.Thurairajah
Patron

Mr.R.Ragunathan
President

Mr.V.Shanmuganathan
Vice President

Mr.S.Ganeshalingham
Secretary

Mr.S.Guneshalingham
Asst.Secretary

Dr.P.Rasiah
Treasurer

Mr.R.Prabaharan
Asst.Treasurer

Mrs.R.Thurairajah
International Coordinator

Mr.T.Puvaneswaran
PRO:

Committee Members:
Mr.M.Paranthaman
Mr.T.Srimurthy
Mr.R.Balendran
Mr.U.Perinpakumar
Mr.A.Raveendran
Mr.V.Maheswaran
Mrs.K.Niththiyananthan
Mrs.P.Thiyagalingam

செய்துள்ளது. மிக முக்கியமான தேவையாயிருந்த சுற்று மதில் அமைக்கும் வேலையை முற்று முழுதாக பொறுப்பேற்று செய்து வருகின்றது. பாடசாலைக்கு இடையில் கற்காடாகவும் முட்புதர்களாகவும் இருந்த நிலத்தை சீரமைத்து அழகான விளையாட்டு மைதானமாக மாற்றிய பழைய மாணவர் சங்க தாய்ச் சங்கத்தை லண்டன் வாழ் பழைய மாணவர்களாகிய நாம் அனைவரும் மனதாரப் பாராட்ட வேண்டும்.

அதிபர், பழைய மாணவர் சங்கம் எம்மைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பாடசாலையில் ஒரு நூலகம் அமைப்பதற்கு தேவையான நிதியைச் சேகரிப்பதற்காக இந்தப் "பூபாள ராகங்கள் — 2000" நிகழ்வை நடாத்தத் திட்டமிட்டோம். இன்றைய நிகழ்வின் மூலம் கிடைக்கும் பணம் முழுவதும் நூலகத் தேவைக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.

எமது பாடசாலை சிறிய பாடசாலையாக இருந்த போதும் பல வைத்தியர்களையும், பொறியியலாளர் களையும், கணக்கியலாளர்களையும், ஆசிரியர்களையும், தொழில் நுட்ப வியளாளர்களையும், பல அரசாங்க உத்தியோகத்தர்களையும் நல்லுள்ளம் கொண்ட சேவையாளர்களையும் உருவாக்கிப் பெருமை கண்டுள்ளது.

இலைமறைகாயாக இருக்கும் அனைத்துப் பழைய மாணவர்களும் எமது பாடசாலை என்ற ஒரு குடையின் கீழ் கூடி பாடசாலையின் வளர்ச்சிக்கு மேலும் பல உதவிகளை வழங்க எம்முடன் இணைந்து செயற்படுமாறு பணிவுடன் வேண்டி, லண்டன் மாநகரில் முதன்முதலில் நடைபெறும் இவ்விழா சிறப்புற நடைபெற அனைவரையும் ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றேன்.

இ.இரகுநாதன்
தலைவர்

CONSERVATIVE COUNCILLOR
C SELVARAJAH LL.B LL.M(LOND.)
ACARB SOLICITOR

BRENT COUNCIL

25 MANOR CLOSE
KINGSBURY
LONDON NW9 9HD

YOUR REF:
OUR REF:
PLEASE QUOTE ON ALL CORRESPONDENCE.

CONSERVATIVE OFFICE:
TEL: 0208 937 1115/6/0
FAX: 0208 937 1114
HOME: 0208 204 3326

# பிரதம விருந்தினரின் வாழ்த்துரை



கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கம் நடாத்தும் "பூபாள ராகங்கள் 2000" விழாவுக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவது என் உள்ளத்தில் எல்லையில்லா மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. விழாவில் கலந்து கொள்ள என்னை அழைத்திருக்கும் விழாக்குழுவின் அத்தனை பேருக்கும் என் உளமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்களது சங்கம் உள்களது முன்னால் கல்லூரியின் முன்னேற்றத்துக்கு அயராது உழைக்கின்றது என்பதில் எந்தவித ஐயமுமில்லை,

கடந்த பல ஆண்டுகளாக எமது தமிழ் உடன் பிறப்புக்கள் நாட்டில் நிலவும் பயங்கரமான சூழ்நிலை காரணமாக இலங்கையை விட்டு வெளியேறி வெவ்வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். நமது ஈழத்திரு நாட்டில் வாழும் தமிழ் மக்களின் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டிருக்கின்றது.

எனது முக்கிய செய்தி என்னவென்றால் ஈழத்தில் வாழும் நம் மக்களை மறந்து விடாமல் அவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும்.

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் கனவை நனவாக்கிக் கொண்டு சேவையாற்றி வரும் கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் முயற்சிகளுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

"பூபாள ராகங்கள் 2000" விழா வெற்றி பெற எனது ஆசிகள்.

சி.செல்வராஜா

**கவுன்சிலர் சி.செல்வராஜா (சொலிஸிட்டர்)**

**பிறண்ட் கவுன்சில்**

*Thiru S. Thiruchelvam*
Commissioner of oaths
Editor in Chief, Tamils' Information
Senior Settlement Counsellor - CCS

P.O.Box -3, Station -F, Toronto, Ontario. M4Y 2L4. Canada. Ph: (R) 416-920-9250. Ph: (B) 416-757-9969 ext: 211. Fax: 416-921-6576



## வளமுடன் வளர்க! பலமுடன் உயர்க!

தமிழீழத்தின் வடமுனையில் நாற்பதாண்டுகளுக்கும் மேலான வரலாற்றுத் தொன்மையைக் கொண்ட கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்றவர்கள் இங்கிலாந்தில் ஒரு அமைப்பினை உருவாக்கி, பாடசாலையின் அபிவிருத்தியை மையமாகக் கொண்டு செயலாற்றி வருவது மகிழ்ச்சி தருவது; பெருமைக்குரியது; பாராட்டுதற்குரியது.

இரு தசாப்தங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் இலங்கையின் உள்நாட்டுப் போரினால் சுமார் ஆறு இலட்சம் ஈழத் தமிழர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் புக நேர்ந்துள்ளது. இவர்களுள் சுமார் 90,000 பேர் இங்கிலாந்தில் குடியேறியுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஒருபுறத்தே போரின் வடுக்கள் மறையாத போதிலும், மறுபுறத்தில் எம்மவர்கள் தங்கள் ஊர், தங்கள் ஆலயம், தாம் கல்வி கற்ற பாடசாலை, தம்மின விடுதலை என்ற உணர்வோடு வேரினை மறவாது புகலிடத்தில் வாழ்ந்து வருவதால், நம்பிக்கையான ஒளிக்கீற்று பளிச்சிடுகின்றது.

கம்பர்மலை வீரத்தின் விளைநிலங்களில் ஒன்று. கல்வி, கலை, கலாசாரம் பாரம்பரியம், பண்பாடு ஆகியவைகளை உரமாகக் கொண்ட புனித கிராமங்களில் ஒன்று. கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை மேற்கொண்டவர்கள், அயற் பாடசாலைகள் ஊடாக உயர் கல்வியில் சித்திபெற்று, தாய்ப் பாடசாலையின் புகழினை வாழ்விடமெங்கும் பரப்பி நிற்கின்றனர்.

இப்பாடசாலையின் பெயரால் இங்கிலாந்தில் 1997ம் ஆண்டில் உருவான மாணவர் சங்கம், மூன்றாண்டுகளில் அரிய பணிகளைப் புரிந்துள்ளது. தற்போது பாடசாலையின் அறிவுக் கண்ணுக்கு விழியாக ஒரு நூலகத்தினை அமைக்கும் நோக்கில் மூன்றாவது ஆண்டுப் பயணத்தை ஆரம்பித்துள்ளது. அன்புக்கினிய இளைஞர் தம்பி சுதாகரன் தொலைபேசியில் தொடர்புறும் போதெல்லாம் இதனைத் தொட்டே உரையாடுவதிலிருந்து, சங்கத்தினர் தங்கள் 'தாய்' மீது காட்டும் அக்கறையையும் கரிசனையையும் அறிய முடிகின்றது.

'வேரோடி விலத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது' என்ற முதுமொழி வழியில் பணியாற்றும் உங்கள் ஒவ்வொருவரையும், 'குட்டித் தமிழீழம்' என அழைக்கப்பெறும் கனடாவிலிருந்து வாழ்த்துவதில் உவகையடைகின்றேன். வாழ்க! வளமுடன் வளர்க! பலமுடன் உயர்க!

திரு எஸ். திருச்செல்வம்
ஜூன் 14, 2000

# அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர்
# கம்பவாரிதி இ.ஜெயராஜ்
# நன்றி மறவா நன்முயற்சி



இந்து சமுத்திரத்தின் முத்தெனப் போற்றப்படுவது இலங்கைத்திருநாடு. அத்திருநாட்டின் திலகமாய்ப் பொலிவது நம் யாழ்ப்பாணம். தொன்று தொட்டு கல்விப் பாரம்பரியம் பேணி வருவது நம் யாழ்ப்பாணத்தின் தனிச்சிறப்பு. நல்லைநகர் நாவலர், புலோலியூர் கதிரவேற்பிள்ளை, சீ.வை.தாமோரம்பிள்ளை போன்ற பேரறிஞர்களை உலகிற் ஈந்து புகழ் கொண்டது நம் யாழ்ப்பாணம். தமிழரைத் தாழ்த்த வேண்டும் எனப் பேரினவாதிகள் நினைப்பதற்கு யாழ்ப்பாணத்தின் கல்வி வளர்ச்சியும் ஒரு காரணமாயிற்று. கண் எனக் கல்வியைப் போற்றிய யாழ்ப்பாணம் இன்று போரினால் சிதைந்து, நலிந்து, சீர்கெட்டுப் போன நிலையில். எனினும், யாழ்ப்பாணம் கல்வியை போற்றும் இயல்பை இன்றும் கைவிடவில்லை. மின்சாரம் அற்று குப்பி விளக்கோடு, ஐம்பது ஆண்டுகள் பின்நோக்கிய நிலையிலும், யாழ்ப்பாண மாணவன் கல்வியில் சாதனை புரிந்து உலகை வியப்பில் ஆழ்த்துகிறான். நெருங்கி வாழ்ந்த தமிழர்கள் இன்று, கூடு கலைந்த குருவிகளாய் உலகம் முழுவதும் பரவி வாழும் பரிதாப நிலையில், எங்கிருந்தாலும் அவர்கள் தம் தாய் நாட்டினது கல்வி வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர் என்பதற்கு, தாம் புகுந்த இடமெல்லாம் கூட்டம் கூட்டமாய், படித்த கல்லூரிகளின் பெயரால் பழைய மாணவர் சங்கம் அமைத்து, பணியாற்றி வருவதே சான்று.

யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சியில் வடமராட்சிக்குத் தனித்த ஓர் இடமுண்டு. ஏற்றமிகும் அறிஞர்களை ஈந்து புகழ் கொண்டது அவ்வூர். நல்லார் பலரை நல்கி பயன் செய்த கல்விக் கூடங்கள் அங்கு அதிகம். அதில் ஒன்றாக திகழ்வது, கொம்மந்தறையில் அமைந்துள்ள கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை. கற்ற மாணவர்கள் கடல் கடந்தும் கல்லூரித் தாயை நினைந்து கடமையாற்றுவதே அத்தாய் அவர்க்குத் தந்த அறிவெழிச்சிக்கான அடையாளம்.

நன்றி மறவா அவர் தம் செயல் நினைந்து தமிழினம் நெகிழ்கிறது. அவர்கள் அனைத்து முயற்சிகளும் சிறக்க என்னை வாழ்விக்கும் கவிச்சக்கரவர்த்தி கம்ப நாட்டாள்வான் தாள் பணிந்து, வாழ்த்துகிறேன்.

வாழ்க! வெல்க!!

காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் தமிழருவி த.சிவகுமாரன்

# எழுத்தறிவிக்கும் இறைக் கோவில்



'கல்வி, தனி மனிதனை சமூகத்துடன் இயைபாக்கம் செய்விக்கிறது' இது நவீன கல்வியாளர்கள் கோட்பாடு. கல்வியைப் பற்றிச் சிந்திக்காத சமூகம், இல்லையென்றே கூறலாம். 'கற்றவனே கண் உடையான்' கல்லாதவன் முகத்திடை இரண்டு புண் உடையான்' என்பது தமிழ் மறை.

'வித்யா விஹினபஸீ'

வித்தையாகிய கல்வி இல்லாதவன் மிருகத்துக்குச் சமம்.

'வித்யா சர்வஷ்ய பூஷணம்'

வித்தையே சகல விதமான ஆபரணமுமாகும். என்றெல்லாம் எமது ரிஷிகள் கல்வியின் பெருமையை விதந்தோதினர்.

'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்' என்பதும் தமிழ்மகள் வாக்கு.

இத்தகைய கல்வியை கற்கும் முறை, காலம், கற்கும் இடம் என்பவற்றையெல்லாம் எமது முன்னோர் தெளிவாக வரையறுத்து பேணி வந்துள்ளனர். குருகுலக் கல்வி முறையே எமது பாரம்பரிய முறையாக விளங்கி வந்தது. ஆசிரியன் வீட்டில் ஒரு சில மாணவர்கள் கூடவே வாழ்ந்து, அவருக்குப் பணி செய்து கல்வி கற்பதும் அப் பருவத்தை கற்போனின் பிரமச்சரிய ஆச்சிரமம் என்றும் வகுத்து வந்தனர்.

காலம் செல்லச் செல்ல நவீன சிந்தனைகள், மெல்ல மெல்ல புதிய வழிகளில் கல்விச் செல்நெறியைக் கொண்டு சென்றன. அந்த வகையில் கல்விக் கூடங்கள் பொதுவாக வளர்ந்து 'எல்லோருக்கும் கல்வி' என்ற கோட்பாட்டுடன் வளர்ந்து சிறந்தன.

கிராமங்கள் நகரங்களில் வளர்ந்த பாடசாலைகளும், கல்லூரிகளும் அங்கங்கே வாழ்ந்தவர்களுக்கு தாயாகி அவர்களை அறிவுப் பாலூட்டி வளர்த்தன.

எங்கு சென்றாலும் தம் தாயையும், தமிழையும் மறக்காத இலங்கைத் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழ்ந்த போதும், தம் கல்லூரியையும் மறந்தாரில்லை.

அவ்வகையில் யாழ். கம்பர் மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வல்வெட்டித் துறையில் கொம்மந்தறையில் அமைந்து ஆயிரக் கணக்கான மாணவர்களை ஆளாக்கியது. தாம் வளர்ந்த கல்லூரியை தாமும் வளர்க்க வேண்டு மென்ற ஆர்வத்தால் ஊரில் இருந்த போதும் அதற்கு தொண்டு செய்த அக்கல்லூரியின் பழைய மாணவர்கள், இலண்டன் மாநகரில் வந்தும் தமது கல்லூரிக்கு தொண்டு செய்ய மறந்தாரில்லை.

தமது கல்லூரியில் அமைய உள்ள நூலகத்திற்காக அவர்கள் எடுக்கவுள்ள "பூபாள ராகங்கள் 2000' என்ற இவ்விழா சிறப்புறுவதாக.

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னவை யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்ற புரட்சிக் கவியின் முழக்கத்திற்கேற்ப, தமது கல்லூரியின் சிறப்பிற்காக முனைந்து நிற்கும் அத்தாயின் மாணவச் செல்வங்களை மனதார வாழ்த்துவோமாக.

**தமிழருவி த.சிவகுமாரன் B.A. (Hons)**

(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம், இலங்கை, ஆசிரியர், வவுனியா தமிழ்த் தேசிய கல்லூரி)

நாட்டியாலய
NATYALAYA
ACADEMY OF TAMIL ARTS

38, Moffat Road
London SW17 7EZ
Tel: 0181 767 8004
Fax: 0181 767 7866

Director: Raghini Rajagopal



*6. 5. 2000*

மீண்டும் தாய் மண்ணை நினைத்துப் பார்க்கிறேன்.

பிறந்து, தவழ்ந்து, விழுந்து, அளைந்து விளையாடிய அந்தப் புண்ணிய பூமியில் நாங்கள் படித்த பாடசாலைகள், எங்களுக்குக் கல்வி ஊட்டிய ஆசான்கள்- அனைவருமே எங்கள் நெஞ்சங்களில் நிறையப் பெற்றவர்கள்.

அந்த வகையில், லண்டனில் வாழும் உடுப்பிட்டி கம்பர்மலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் படித்த மாணவர்கள், தம்பாடசாலை வளர்ச்சிக்காக எடுக்கும் விழாவில் பங்கு கொண்டு சில நடன நிகழ்ச்சிகளை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அப் பாடசாலையின் வளர்ச்சிக்காக நிதி சேகரித்து, தாம் படித்த அந் நிறுவனத்தினை உயர்த்த நினைக்கும் அவர்கள் நல்லெண்ணத்தை பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் எனக்கு இன்னொரு வகையில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

நான் புகுந்த மண்ணின் மிக அண்மித்த அழகான அயலூர் கிராமத்தில் அமைந்த பாடசாலைதான் இது. அங்கு போகிற சமயங்களில் எல்லாம் நெற் கதிர்கள் பூத்துக் குலுங்கும் வயல்களுக்கும் பச்சைப் பசேலென காட்சி தரும் தோட்டங்களுக்கும் மத்தியில் அமைந்த இப்பாடசாலைப் பக்கமாகப் பல தடவை சென்று இருக்கிறேன்.

இப் பாடசாலையில் படித்த பழைய மாணவர்கள் சிலர் என்னிடம் வந்து, தமது பள்ளியைப் பற்றிச் சொல்லி, நிகழ்ச்சி தந்துதவுமாறு கேட்டபோது, மீண்டும் தாய் மண்ணுக்கு நினைவுகள் பறந்து சென்று விட்டன.

தாயகத்தில் இன்றுள்ள நிலைமைகளில், அங்குள்ள கல்விக் கூடங்கள் எந்தளவு கஷ்டங்களுக்கு மத்தியில் இயங்குகின்றன என்பது விளக்கித் தெரிய வேண்டியதில்லை.

நாளாந்தம் அவலங்களோடு போராடிக் கொண்டு, அரசாங்கத்தின் புறக்கணிப்புகளுக்கு மத்தியில் இயங்கும் அப் பாடசாலைகளின் பரிசளிப்பு விழாக்கள் போன்ற சிறு சிறு வைபவங்களைக் கூட நடத்த முடியாது படுகின்ற துயரச் சம்பவங்கள்- காற்றோடு கலந்து வரும் வேதனையான செய்திகள். இந் நிலையில் புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்தான் இயன்றளவு உதவிகளை வழங்க வேண்டியவர்களாக உள்ளோம்.

ஒவ்வொருவரும் தாம் படித்த பாடசாலைகளை நினைத்து இவ் விதமான நிதிகளைச் சேகரித்து அனுப்புவது அவர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும்.

சிறு துளி பெரு வெள்ளம்.

இந்த நடன நிகழ்ச்சியை இப் பாடசாலை வளர்ச்சிக்காக வழங்க வைத்த, அங்கு படித்து இங்கு வாழும் மாணவர்களின் நன்றியுள்ளத்தை நெஞ்சார வாழ்த்துகிறேன்.

ராகினி ராஜகோபால்

**ராகினி ராஜகோபால்**

*(நாட்டியாலயா)*

# தமிழ் அவைக்காற்று கலைக் கழகம்

## TAMIL PERFORMING ARTS SOCIETY

BM BOX 577 LONDON WC1 N3XX
TEL: ++44 (0) 20 8459 4335 / 470 7883
FAX: ++44 (0) 20 8451 9369



ஓர் இனத்தின் கலாச்சார செழுமை, அரசியல் சமூக நோக்கினை, அதன் ஆன்மாவை பண்படுத்துவதாக அமையும். நாம் உலகில் எந்த மூலையில் இருந்தாலும் எமது தேசிய வாழ்வுக்கு ஆரோக்கியமானதொரு பங்களிப்பினை நாடுவதெனில், எமது சிந்தனைச் செழுமையும் விசாலமடைவது அவசியம். இதற்கு எம்மவரது கலாச்சார ரசனை மட்டம் உயர்வதும் ஒரு உறுதியான பங்களிப்பாகும்.

யாழ் கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கம் தாயகத்தில் பயிலும் சிறுவர்களுக்கு உதவும் வண்ணம் மிகுந்த சிரத்தையுடன் ஒழுங்கு செய்திருக்கும் 'பூபாள ராகங்கள் — *2000*' நிகழ்ச்சியில் லண்டன் சிறுவர் நாடகம் மூலம் பங்கு கொள்வதில் பெரு மகிழ்வடைகிறோம். மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் பலர் கலைத்துறையில் பணியாற்றி வருகிறார்கள். இவர்களில் சிலர் எமது கழகத்தின் பணிகளிலும் நீண்ட காலமாக பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

எமது அடுத்த சந்ததியினருக்கு, புகலிடச் சூழலில் சுய அடையாளத்தை விருத்தி செய்யவும் தமிழ்ச் சமுதாயத்தை நவீனத்துடன் பரிச்சயம் செய்யவும் ஆக்க இலக்கியங்களும், அவைக்காற்று கலைகளும் உதவுவன. நாடகத்தின் பங்கு மற்றக் கலைகளைவிட நேரடியானது. சமூகப் பாங்கானது.

'தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் தொடர்ந்த கால் நூற்றாண்டு கலைப் பயணத்தில் கடந்த ஒரு தசாப்த காலமாக லண்டனில் சிறுவர் நாடகங்களை தமிழில் தயாரித்து மேடையேற்றியுள்ளோம். சிறுவர் அரங்கம் பெரியோர் அரங்கிலிருந்து வேறுபட்டது. அரங்க உருவாக்கம், ஒழுங்கமைதி, லயம், அனுபவப் பகிர்வு அனைத்திலும் வேறு தளத்தில் இயங்குவது. நாடகப் பிரதிகளை பேராசிரியர் சி.மௌனகுரு, சி.சிவசேகரம் ஆகியோர் எழுத அனுபவம் மிக்க எமது மேடைக் கலைஞர்களுடன் இத்தயாரிப்புகள் மேடையேறுகின்றன.

அரங்க விளையாட்டுக்கள் மூலம், நாடகப் பட்டறையின் போது சிறுவர்களைக் கொண்டே சில அரங்கக் காட்சிகளை உருவாக்கச் செய்கிறோம். இச்சிறுவர்களது கற்பனைத் திறனும், ஆக்கத் திறனும் நாடகத் தயாரிப்பில் அங்கமாகிற போது அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு கொள்கிறார்கள். பயில்கிறார்கள். சிறுவர்களின் ஆளுமை

## தமிழ் அவைக்காற்று கலைக் கழகம்

**TAMIL PERFORMING ARTS SOCIETY**

BM BOX 577 LONDON WC1 N3XX
TEL: ++44 (0) 20 8459 4335 / 470 7883
FAX: ++44 (0) 20 8451 9369

வளர்ச்சி, கூட்டு முயற்சியில் உருவாகும் கூட்டு மனப்பாங்கு, அனுபவ ரீதியாக உணர்ந்து பயிலும் தமிழ் மொழியாற்றல் போன்ற பலாபலன்களை சிறுவர்களில் நேரடியாக காணும் பெற்றோர்களும் ஆர்வத்துடன் ஒத்துழைப்பதினாலேயே இந்நாடகங்களை சுமார் 30 தடவைகள் லண்டனில் மேடையேற்றுவது சாத்தியமாயிற்று.


எமது நாடக இயக்கத்திற்கு இலங்கையிலும் லண்டனிலும், மற்றும் கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும், ஐரோப்பாவிலும் பல்வேறு சமூக அமைப்புக்கள் உதவியிருக்கின்றன. இப்படியான பரஸ்பர கூட்டுழைப்பினாலேயே எமது தொடர்ந்த தீவிர நாடக இயக்கம் வலுப்பெறுகிறது.

யாழ்.கம்பர்மலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினரும் பல்லாண்டு காலம் தமிழ்க் கலைத்துறைக்கு உதவுவதுடன் தாயகத்து சிறார்களுக்கும் உதவ வேண்டும் என வாழ்த்துவதில் மகிழ்வடைகிறோம்.

அன்புடன்
க.பாலேந்திரா

---

## பேராசிரியர் கா.சிவத்தம்பி



கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணவர்கள், லண்டனில் தமது ஆரம்ப பாடசாலையை மனதிற் கொண்டு ஒரு கலை நிகழ்ச்சி ஒழுங்கு செய்கின்றனர்.

தகவலைக் கேட்கவே உடல் சிலிர்க்கின்றது. புலம் பெயர் நிலையில் வீட்டு நினைவுகளும், நாட்டு நினைவுகளும் எவ்வாறு மனங்களில் வியூகமிடுகின்றன என்பதை இது உணர்த்துகின்றது.

இப்படியான நினைவுகள் வற்றிவிட்டால், பாசங்கள் குறையும், பிணைப்புக்கள் அறத் தொடங்கும். பாடசாலை நினைவை மையமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சி மலர்கின்றது. அது சிறக்கட்டும். உங்கள் திறன்களின் வளர்ச்சியில் நாங்கள் பூரிப்படைகிறோம். உங்கள் முயற்ச்சி வெல்க.

கார்த்திகேசு சிவத்தம்பி
M.A.(SL), Ph.D (Birm)D.Litt (honoris causa) Jfn
தகைசார் ஓய்வு நிலை பேராசிரியர் — யாழ்பல்கலைக்கழகம்

கொழும்பு
18.07.2000

# முன்னாள் உடுப்பிட்டி கொத்தணி அதிபர் ந.அனந்தராஜ்

# ஓங்குற வளரும் கம்பர்மலைக் கலையகம்



"அன்ன சத்திரம் ஆயிரம் அமைப்பதை விட பின்னயாவினும் புண்ணியம் கோடி, ஆங்கோர் எழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற பாரதியின் கவி மொழியை நினைத்துப் பார்க்கின்றேன். ஆயிரம் சிறைச்சாலைகளைக் கட்டுவதைவிட ஓர் கல்விச் சாலையைக் கட்டுவதும், ஒரு குழந்தைக்கு எழுத்தறிவை ஊட்டும் வகையில் பாடசாலைகளைக் கட்டுவதும் கோடி புண்ணியம் என்பதை நமது முன்னோர்கள் அறிந்து வைத்திருந்ததனால் ஆங்காங்கே கிராமங்கள் தோறும் கல்விச் சாலைகளை அமைத்தனர் போலும்.

ஆம்.... யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியப் பின்னணியில் வடமராட்சிக்கு என ஒரு தனித்துவம் பேணப்பட்டு வருகின்றது. அந்த வகையில் கல்வி மணம் பரப்பும் கலையகமாக ஒளிர்ந்து கொண்டிருக்கும் கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கடந்த கால வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கின்றேன்.

உடுப்பிட்டிக் கொத்தணிப் பாடசாலைகளின் கொத்தணி அதிபராக நான் இருந்த போது எனது கல்வி நிர்வாக மேற்பார்வையின் கீழ் கல்விச் செயற்பாடுகளிலும் கலை, இலக்கிய விளையாட்டு முயற்சிகளிலும் துரிதமாக வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வளர்ச்சியில் சிறிது காலம் பங்கெடுத்தவன் என்ற பெருமிதத்தில் அதன் சாதனை பதித்த அடிச் சுவடுகளைத் திருப்பிப் பார்க்கின்றேன்.

அந்த இனிய நாட்களை நினைக்கும் பொழுது நெஞ்சிலே ஒரு மனநிறைவும், கல்விக் கூடங்களை மேலும் மேலும் உருவாக்கி அவற்றை உயர்வுறக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற மன வைராக்கியமும் எங்கள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஊற்றெடுப்பதில் என்ன விந்தை.

1950களில் யாழ்ப்பாண மண்ணை சாதி, சமய, சமூக வேறுபாடுகள் அசுரத்தனமாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்த காலப் பகுதியில் எமது மக்களிடையே வேரறுத்துக் கொண்டிருந்த சாதி, சமய வேறுபாடுகளை உடைத்தெறியும் வகையில் கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தோற்றம் பெற்ற அந்த நிகழ்வை நெஞ்சில் பதித்தவர்களால் இலகுவில் தூக்கி எறிய முடியுமா?

எத்தனையோ எதிர்ப்புக்கள், சமூக முரண்பாடுகள் மத்தியில் 1958ம்

ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி அன்று சின்னஞ்சிறிய ஒரு ஓலைக் கொட்டிலில் தோற்றம் பெற்ற கம்பர்மலையின் கலைக் கோயிலான அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஒப்பற்றதொரு பாடசாலையாக இந்த மண்ணில் தடம் பதித்துக் கொண்டதே, ஒரு வரலாறுதான்.

கம்பர்மலை 'தலைவர்' என்று பெருமையுடன் அழைக்கப்படும் 'தலைவர் தங்கராஜாவின் மனதில் தோழர் வைத்திலிங்கத்தின் உதவியுடன் உருப்பெற்ற இப்பாடசாலை முதலில் "மாத்தரா வளவு" என்னும் காணியில் 60 அடி நீளக் கொட்டிலில் தன் கல்வி, சமூகப் பணியை ஆரம்பித்தது. அதன் பின்னர், கொம்மந்தறையின் பெரியார் வே. வெங்கடாசலம் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட விறாச்சியின் பரந்த நிலப்பரப்பில் கோயிலும், சுனையும் நிறைந்த சூழலில் பெரிய கிடுகுக் கொட்டகைகளாக மாற்றப்பட்டுப் பின்னர் கம்பர்மலை மக்களினதும் அரசினதும் முயற்சியினால் அழகான இரண்டு கட்டடங்களாக உயர்ந்தது.

அதேவேளை "இந்து போட்" நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த சிறிய பாடசாலையான கொம்மந்தறை இந்து தமிழ் வித்தியாலயம், அதன் அருகாமையில் சிறப்புடன் இயங்கி வந்தாலும், ஒரே கிராமத்தில் ஒரே சூழலில் ஒரே பண்பாட்டுப் பின்னணியில் வாழ்ந்து வருகின்ற மக்களின் தேவை கருதியும், ஊரின் எதிர்கால முன்னேற்றம் கருதியும் பல கல்விமான்கள், ஊர்ப் பெயரியார்களின் அயராத முயற்சியினால் கம்பர்மலை அ.த.க. பாடசாலையையும், கொம்மந்தறை இந்து தமிழ் வித்தியாலயத்தையும் ஒரே நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்ட அந்த வரலாற்று நிகழ்வானது கல்வியில் ஓங்கிய கம்பர்மலை வரலாற்றில் இன்னுமொரு திருப்புமுனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அன்று பெரும் பகீரதப் பிரயத்தனங்களுடன் கோலாகலமாக ஒன்றிணைக்கப்பட்ட அந்தக் கலைக் கோயில் பல சோதனைகளையும், வேதனைகளையும் சந்தித்து இன்று பல சாதனைகளைப் படைத்து முன்னேறி வருவது நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகின்றது.

கணிதத்திற்கும், கட்டிடத்துறைக்கும் பெயர் பெற்றது கம்பர்மலை என்பதைக் கற்றறிந்தோர் உணர்ந்துள்ளனர். அந்தக் கலைக் கோயிலின் ஊடாகத் தோற்றம் பெற்ற பொறியியலாளர்கள் எத்தனை பேர்?.... மருத்துவர்கள் எத்தனை பேர்?... ஆசிரியர்கள் எத்தனை பேர்?.... கணக்காளர்கள் எத்தனை பேர்?.... பட்டதாரிகள் எத்தனை பேர்?.. இப்படி நீண்டு செல்லும் இந்தப் பட்டியலை உருவாக்கிய பெருமை கொண்ட கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இலண்டனிலும் விழா எடுக்கும் பழைய மாணவரின் சேவை அதற்கான நன்றிக் கடனோ?.. அல்லது பெருமைக்குரிய காணிக்கையோ?... இலண்டனில் ஒலிக்கும் "பூபாள ராகங்கள் 2000" கலை நிகழ்வில் கம்பர்மலையின் நாதமும் ஒலிப்பது பேருவகை தருகிறது.

அந்தப் புனித மண் பெற்றெடுத்த கலைக் கோயிலை வாழ்த்துவதிலும் அது இன்னும் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து, வளர்ந்து, பல நூற்றுக் கணக்கில் அறிஞர்களையும் தேசப் பற்றாளர்களையும், புரவலர்களையும் பிரசவிக்க வேண்டும் என்று ஆசி கூறுவதிலும் இறைவனை வேண்டுவதிலும் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

அந்தக் கல்விக் கலையகத்தின் உயர்விலே, தம்மை அர்ப்பணித்த, இன்னும் அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் அதிபர்களையும், ஆசிரியர்களையும், அதற்கு உறுதுணையாக நின்று செயற்படும் பெற்றோர்களையும் பழைய மாணவர்களையும் நல்லொழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் வாழப் பழகி விட்ட மாணவச் செல்வங்களையும் வாழ்த்துவதற்கு ஒரு வார்த்தை போதுமா?

கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இயங்கும் பழைய மாணவர் சங்கத்தின் உத்வேகமும் செயல் வேகமும் நல்லதொரு அறிகுறியாக முன்னெடுத்துச் செல்லப்படும் இவ்வேளையில் கம்பர்மலை கல்விச் சமூகம் உயர்வுடன் ஓங்க வாழ்த்துகின்றேன்.

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு கிழக்கு மாகாணம்
திருகோணமலை
*01.07.200*

**ந.அனந்தராஜ்**
முன்னாள் கொத்தணி அதிபர்
யாழ்/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
வல்வெட்டித்துறை


# MARKANDAN & CO

## SOLICITORS

**Empowered to Administer Oaths**

**THAMIL HOUSE**
**720 ROMFORD ROAD**
**MANOR PARK**
**LONDON E12 6BT**

Legal Aid

## M. MARKANDAN LL.B.

* Immigration / Home Office
* Refugee - Asylum* Commercial Conveyancing * Matrimonial
* Licensing * Representation at police Station
* House / Flat Purchase or sale etc.

**LEGAL AID -FRANCHISE**
**WE ARE ALWAYS FRIENDLY, EASY TO TALK AND KEEN TO HELP.**

**TEL : 020 8514 8188 FAX : 020 8514 8303**

*With Compliments from*

# *SKC*

# *SRI KANTH & CO.*

## *SOLICITORS*

*ADMINISTRATORS OF OATHS*

**557 High Road**
**Wembley**
**Middlesex**
**HA02DW.**

**Tel: 020 8795 0648 (5Lines)**
**Fax: 020 8795 0649**
**Mobile: 0831 195 979**

## வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்
## இ.சிவானந்தன்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற தமிழ் மூதாட்டி ஔவையின் கருத்து இன்று பாடசாலை இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற எண்ணக்கருவுடன் வளர்ச்சி பெற்று வருவதைக் காண்கின்றோம். அந்த அளவுக்கு கிராமங்கள் தோறும் வாழ்கின்ற சமூகங்களுடன் பின்னிப் பிணைந்து விட்ட சமூக நல நிறுவனங்களாக பாடசாலைகளே விளங்குகின்றன என்றால் மிகையாகாது.

அந்த வகையில் வடமராட்சி வலயத்தில் அமைந்துள்ள கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை கம்பர்மலை கிராமத்தின் குறிகாட்டியாக வளர்ச்சி பெற்று எத்தனையோ கல்விமான்களை உருவாக்கி, இன்று உலகளாவிய ரீதியில் பழைய மாணவர் சங்கங்களைக் கொண்டிருக்கும் நிலைக்கு உயர்ந்து நிற்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு கல்வி நிறுவனத்தின் வளர்ச்சி அந்தக் கிராமத்து மக்களின் உணர்வு பூர்வமான எழுச்சியின் பிரதிபலிப்பே என்பதைக் கல்விச் சமூகம் இன்று உணர்ந்துள்ளது.

ஒரே கிராமத்தின் அருகருகே இயங்கும் மாணவர் எண்ணிக்கை குறைந்த பாடசாலைகளை ஒன்றிணைத்து மீள்வியூகம் செய்வதன் மூலம், ஒரு உறுதியான, வளங்கள் நிறைந்த தனித்துவம் மிக்க பாடசாலையாக கட்டி எழுப்பமுடியும்என்பதற்கு கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இன்று சான்று பகருகின்றது.

கம்பர்மலை அ.த.க பாடசாலையும், கொம்மந்தறை இந்து தமிழ் வித்தியாலயமும் ஒன்றாக இணைக்கப்பட்ட பின், அது பெற்ற வளர்ச்சியை இன்று பார்க்கும் பொழுது எமக்குப் பெருமை தருகின்றது.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபடும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர் மற்றும் கல்விச் சமூகத்துடன் உறுதுணையாக நின்று உழைக்கும் கம்பர்மலை அ.த.க.பாடசாலையின் லண்டன் பழைய மாணவர் சங்கத்தினரின் பணிகளை பாராட்டுகின்றோம்.

இப்பாடசாலை மேலும் புகழ் பெற்று வளர வேண்டும் என்று ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

இ.சிவானந்தன்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்

மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு கிழக்கு மாகாணம்
திருகோணமலை

## வடக்கு கிழக்கு மாகாணகல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலா

*"நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்*
*நகர்க ளெங்கும் பலபல பள்ளி*
*தேடு கல்வியிலாததொரூரைத்*
*தீயினுக் கிரையாக மடுத்தல்"*

என்ற மகாகவி பாரதியின் பாடலின் மூலம், ஒரு ஊரில் அமைந்துள்ள கல்விச் சாலைகளின் பெருமை பேசப்படுகிறது.

ஆம்!.... நான் பிறந்து, தவழ்ந்து, படித்து, விளையாடிய வல்வெட்டிக் கிராமத்துடன், அதன் பண்பாட்டு விழுமியங்களுடாகப் பின்னிப் பிணைந்து விட்ட கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் எழுச்சியும் ஒன்றிணைப்பும், அதன் வளர்ச்சியும் என்னை மெய்சிலிர்க்க வைக்கின்றன.

ஒரு கிராமத்தின் குறிகாட்டியாக விளங்கும் பாடசாலை ஒரு சமூகத்தின் வாழ்வியலின் தொடர்ச்சியை இன்னொரு சந்ததிக்கு எடுத்துச் செல்லும் பாரிய பணியை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் ஊர்ப் பெரியவர்களின் முயற்சியினால் உருவாக்கப்பட்டு இன்று கல்வி உலகில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்து உயர்ந்து நிற்கும் கொம்மந்தறையில் அமைந்துள்ள கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வளர்ச்சியில் நானும் பங்கு கொண்டு பெருமிதம் அடைகின்றேன்.

ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் பழைய மாணவர் சங்கத்தின் பணியும் முக்கியத்துவமும் எந்தளவில் முதன்மை பெறும் என்பதை உணர்ந்தவன் என்ற வகையில், லண்டன் மாநகரில் தாம் கற்ற கல்விக் கூடத்தின் வளர்ச்சி கருதி விழா எடுக்கும் லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

இப்பாடசாலையின் வளர்ச்சியில் எத்தனையோ கஸ்டங்களின் மத்தியில் முன்னின்று உழைக்கும், அதிபர், ஆசிரியர், மற்றும் கல்விச் சமூகத்தினரின் உழைப்புக்கள் அர்த்தமுள்ளவையாகி ஒரு ஆற்றல் மிக்க சமுதாயத்தைக் கட்டி எழுப்ப வழிவகுக்க வேண்டும் என்று ஆசி கூறுகின்றேன்.

**சுந்தரம் டிவகலாலா**
**முன்னாள் செயலாளர்**

**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு**
**வடக்கு கிழக்கு மாகாணம்**
**திருகோணமலை**

## வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
## ஆசிச்செய்தி

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்"

"ஆன்றவிந்து அடங்கிய நல்லோர் வாழும் ஊரில் கல்விச் சாலையும் கோயிலாகப் பேணப்படும்" என்ற மரபின் வழி வளர்ந்து வடமராட்சியில் கல்வி ஒளிபரப்பி நிற்கும் கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வளர்ச்சியைப் பார்க்கும்போது என் உள்ளம் புளகாங்கிதம் அடைகின்றது.

புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றியும், பாடசாலை மீள்வியூக மாற்றறங்கள் பற்றியும் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் சுமார் 30 வருடங்களுக்கு முன்னரே மீள்வியூக அமைப்பின் கீழ் பாடசாலைகளை ஒன்றிணைப்பதன் அவசியத்தை உணர்ந்த கம்பர்மலை அறிவுழைப்பாளிகளின் தீர்க்க தரிசனம் என்னை வியக்கவும், சிந்திக்கவும் வைக்கிறது. அன்று அருகருகே இயங்கிய கொம்மந்தறை இந்து தமிழ் வித்தியாலயமும், கம்பர்மலை அ.த.க.பாடசாலையும் இவ்வாறு ஒன்றிணைக்கப்பட்டதன் பின்னரே கம்பர்மலை கல்வி உலகில் எழுச்சி பெற்றது. மாணவர் எண்ணிக்கையில் குறைந்து, வளம் அருகி, நலிவடைந்து கொண்டு செல்லும் பாடசாலைகளை ஒன்றிணைத்து ஒரே நிர்வாகத்தின் கீழ் வளம் நிறைந்த பாடசாலையாக கொண்டு வருவதன் மூலம் கல்விச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சேல்லலாம் என்ற தத்துவத்திற்குச் சான்றாக இன்று கம்பர்மலை அ.த.க.பாடசாலை தலைநிமிர்ந்து நிற்பது மகிழச்சியைத் தருகின்றது.

இப்பாடசாலை வடமராட்சியின் பாரம்பரிய விவசாயக் கிராமத்திலிருந்து பல அறிஞர்களையும், கல்விமான்களையும் உருவாக்கி கல்வி உலகில் தனக்கென தனி ஒரு இடத்தைப் பதித்து முன்னணியில் திகழ்வதற்கு இப்பாடசாலையின் வழி வழியாக வந்த அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், பழைய மாணவர்களும் எடுத்துவரும் முயற்சிகளே காரணம் என்பதை நான் இங்கே கூறவிரும்புகின்றேன். அந்த வகையில் தாம்கற்ற கல்விக்கூடத்தின் பெருமைகளைப் பேசவும், அதனை வளர்த்தெடுப்பதற்கு வேண்டிய உதவிகளை வழங்கவும் முன்னின்று உழைத்துவரும் இலண்டன் பழைய மாணவர் சங்கக் கிளையினர் நடாத்தும் "பூபாள ராகங்கள் 2000" சிறப்புற நடந்தேற எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இத்தகைய நிகழ்வின் ஊடாக பாடசாலை வளர்ச்சிக்கு வேண்டிய ஆக்க பூர்வமான உதவிகள் கிடைப்பதையிட்டு கல்விச் சமூகம் பூரிப்படைகின்றது. இதன் வளர்ச்சியில் அக்கறையுடன் உழைக்கும் அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளின் நற்பணியும், அயராத சேவையும் தொடர்ந்தும் இப்பாடசாலைக்கு கிடைக்க வேண்டும் என்றும், இப்பாடசாலையின் புகழ் மேலும் விளக்கம் பெற வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

**க.பரமேஸ்வரன்**

செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை.

ஈழகேசரி

**EELAKESARI**

The International Tamil News Magazine Editor: E. K. Rajagopal

38 Moffat Road
London SW17 7EZ
Tel: 0181-767 8004
Fax: 0181-767 7866

பெற்றெடுத்துத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த வல்வெட்டிக் கிராமத்தை நினைத்துப் பார்க்கிறேன். நெஞ்சத்து நினைவுகளெல்லாம் சிறகடித்துப் பறக்கின்றன.

துள்ளித் திரிந்த பள்ளிப் பராயத்தில்- அரைக் காற்சட்டைப் 'பொடியன்'களாக அண்மித்த பகுதிகளுக்குள் நண்பர்களுடன் ஓடியாடிப் புழுதிகளுக்குள்ளும் சகதிகளுக்குள்ளும் புரண்டு எழுந்த காலத்திலிருந்து கொம்மந்தறைக் கிராமம் அழியாக் கோலமாக மனதோடு வாழ்கிறது.

பச்சைப் பசேலென்று செழிப்போடு தோட்டமும் வயலும் சேர்ந்து உழைப்பின் வலுவான கரங்களால் நிமிர்ந்து தன்மானத்தோடு தலைநிமிர்ந்து நின்ற அந்தக் கிராமத்தின் மத்தியில் அமையப்பெற்ற யாழ். கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை கொம்மந்தறை கிராமத்துக்கு சிறப்பைத் தேடித் தந்தது.

விவசாயத்தின் மூலம் தம் கிராமத்தையும், தம்மையும் வளப்படுத்திய கமக்காரர்களின் பிள்ளைகள் அப் பாடசாலையில் படித்து, உயர்கல்வி பயின்று, அங்கும் இங்கும் எங்கும் செறிந்து, தாம் பிறந்த மண்ணுக்குப் பெருமை தேடிக் கொடுக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் பெரிய பாடசாலைகள் என்று சொல்லக் கூடிய பலவற்றின் பழைய மாணவர்கள் சங்கங்கள் மட்டும்தான் 'ஒன்றுகூடல்'களை ஆரவாரமாக நடத்தி வந்துள்ளன. ஆனால் முதல் தடவையாக ஒரு சிறு கிராமத்தில்அமைதியாகக் கல்விப் பணியாற்றிய பாடசாலை ஒன்று- மண்டபம் நிறைந்த இவ்விதமான விழாவை நாடறிய நடத்தியதில் இருந்து- கொம்மந்தறை பாடசாலையின் பலம் தெரிகிறதல்லவா. அங்கு படித்த பழைய மாணவர்கள் சக்தி புரிகிறதல்லவா.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'- இதையே இன்று உணர்த்துகிறது -இப் பாடசாலை பழைய மாணவர் சங்கம் வழங்குகின்ற 'பூபாள ராகங்கள்- 2000'.

பல தரப்பட்ட மக்களைக் கவரக் கூடிய வகையிலே நிகழ்ச்சிகளை இன்று தயாரித்திருக்கிறார்கள். அவர்கள் குறிக் கோள் எல்லாம் நிறைவான நல்ல நிகழ்ச்சிகளை வழங்கி- தமது பாடசாலையை நிறைவுள்ளதாக வளர்க்க வேண்டும் என்பதே.

நான் பிறந்த வல்வெட்டி மண்ணின் உறவுகள் என்ற உணர்வோடு, உரிமையோடு, இதயசுத்தியோடு பாடசாலையையும், பழைய மாணவர் சங்கத்தையும் வாழ்த்துகிறேன்!

நம் வாழ்வுக்கும் வளத்துக்கும் வழி காட்டிய பாடசாலையை நாம் மறந்து விடலாகாது என்ற உயரிய தத்துவத்தை நமக்கு இன்று புகட்டியிருக்கிறார்கள், யாழ். கம்பர்மலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர். படிக்காவிட்டாலும், 'தேடிக் கண்டு பிடித்து' யாழ்ப்பாணத்தின் பெரிய பாடசாலையில் படித்தவர்கள் என்று சொல்வதையே பெருமையாகக் கருதுகிற இந்நாளில் சிறிய பாடசாலையில் படித்த நன்றியை மறவாது இங்கு உலகறிய விழா எடுக்கிற இவர்களை மனதால் பாராட்டி, மீண்டும் வாழ்த்துகிறேன். இவர்கள் பணி வெல்க!

ஈ.கே. ராஜகோபால்
*(ஆசிரியர்: 'ஈழகேசரி', 'புதினம்')*

# KAMPARMALAI SCHOOL ALUMNI ASSOCIATION(U.K)

கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கம்(ஐ-இ)

Kommantharai Valvettiturai Sri Lanka 77 Kings Road, Harrow, Middx HA2 9JG, U.K.


Mr.S.Thurairajah
Patron

Mr.R.Ragunathan
President

Mr.V.Shanmuganathan
Vice President

Mr.S.Ganeshalingham
Secretary

Mr.S.Guneshalingham
Asst.Secretary

Dr.P.Rasiah
Treasurer

Mr.R.Prabaharan
Asst.Treasurer

Mrs.R.Thurairajah
International Coordinator

Mr.T.Puvaneswaran
PRO:

Committee Members:

Mr.M.Paranthaman

Mr.T.Srimurthy

Mr.R.Balendran

Mr.U.Perinpakumar

Mr.A.Raveendran

Mr.V.Maheswaran

Mrs.K.Niththiyananthan

Mrs.P.Thiyagalingam


## செயலாளரின் எண்ணத்தில்.....



எமது பாடசாலை என்கின்ற போது அது எமது கிராமத்தை அடையாளப்படுத்தும் சின்னங்களுள் முதலானது. அடையாளப் படுத்துவது மட்டுமல்ல அழகுபடுத்துவதும் அதுவே. அழகு என்று சொல்லும் போது அதன் ஒவ்வொரு மாணவர்களுக்கும் அறிவையும் ஆற்றலையும் வளர்த்து, அவர்களது வாழ்க்கை அழகுற அமைவதன் காரணியும் அதுவே. அகர எழுத்துக்களில் இருந்து எமது அறிவு வளர்ச்சிக்கு வித்திட்டு எம்மை வளர்த்து எடுத்த இடம் அது. கல்வியோடு மட்டுமல்ல, விளையாட்டுக்கள், கலை விழாக்கள் என பல அம்சங்களில் எமது பாடசலையுடன் நாம் ஒன்றியிருக்கின்றோம். அப்படிப்பட்ட எமது பாடசாலையின் ஒவ்வொரு அங்குல இடத்தையும் அதன் பழைய மாணவர்களாகிய நாம் அனுபவித்து ரசித்திருக்கின்றோம். அதனால் எமது பாடசாலையின் நிலையும் அதற்கு இருந்த தேவைகளும் நாம் அறிந்ததே. அங்கிருந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் முயற்சியால் சில தேவைகள் நிறைவேற்றப்பட்ட போதும் அது போதியதாக இல்லை. அதன் தேவைகளை மனதிற் கொண்ட புலம் பெயர்ந்து லண்டனில் வாழும் பழைய மாணவர்கள் சிலரது முயற்சியால் இச்சங்கம் 1997 இல் அமைக்கப்பட்டது. அன்று எமக்கு இருந்த ஆதரவு மிகக் குறைவே.

ஆனால் இன்று முழு ஆதரவு கிடைத்திருக்கின்றது என்று சொல்லும் அளவிற்கு, ஒவ்வொரு பழைய மாணவர்களும் எம்முடன் இணைந்து வருகிறார்கள். இந்த மூன்று வருட காலத்தில் குறிப்பிட்ட அளவு பாடசாலையின் அபிவிருத்திக்கு ஒதுக்கியிருக்கிறோம். ஆயினும் பாடசாலையில் ஒரு நூலகம் கட்டாயமாக அமைக்கப்பட வேண்டும் என்று அதிபர் கேட்டுக் கொண்டதை முன்னிட்டு நூலக அமைப்பு நிதிக்காக இக்கலை நிகழ்ச்சியை நடாத்துகின்றோம்.

லண்டனில் வாழும் எமது பாடசாலையின் ஒவ்வொரு மாணவர்களும் இச்சங்கத்தின் மூலம், பாடசாலையின் அபிவிருத்தி வேலைகளில் உதவி செய்யுமாறு இச்சங்கத்தின் சார்பாக வேண்டிக் கொள்கிறேன். இந்த "பூபாள ராகங்கள் — 2000" கலை நிகழ்வை இனிதே நிறைவேற்ற உதவி செய்த அனைத்து தரப்பினருக்கும் சங்கத்தின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ்.குணேசலிங்கம் — உபசெயலாளர்**

# ராகினி ராஜகோபாலின்
# 'நாட்டியாலயா'

நடனத் துறையோடு இருபத்தைந்து ஆண்டுகள் இரண்டறக் கலந்த நெஞ்சத்து நினைவுகளோடு தமது 'நாட்டியாலயா' நடனப் பள்ளியில் பயிலும் சில குழந்தைகளின் நாட்டிய நிகழ்ச்சிகளை பெருமையோடு இன்று உங்கள் முன் அரங்கம் ஏற்றுகிறார் நடன ஆசிரியை திருமதி ராகினி ராஜகோபால்.

ஐரோப்பாவின் முன்னணி நடன ஆசிரியையாகத் திகழும் இவர்- தாய் மண்ணில் ஆரம்பித்து நடத்தி வந்த 'நாட்டியாலயா' நிறுவனத்தின் பணியை லண்டனிலும் பதினைந்து ஆண்டு காலம் தொடர்ந்து நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

பதினாறாவது வயதில் தன் இரட்டைச் சகோதரி விநோதினி(சண்முகநாதன்)யுடன் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பரதநாட்டிய அரங்கேற்றம் கண்டவர் ராகினி.
நடனமேதை சாந்தா பொன்னுத்துரையின் முதலாவது மாணவிகள் இவர்கள் என்ற பெருமையும் இவர்களுக்கு உண்டு. இதனைத் தொடர்ந்து
நாட்டியக் கலாமேதை பத்மஸ்ரீ அடையாறு லக்ஷ்மணனிடம் இரண்டாண்டு பரதக் கலையின் உயர் தத்துவங்களையும்- நட்டுவாங்கத்தினையும் முறையாகப் பயின்று பட்டம் பெற்றார்.

இலங்கை நுண்கலைப் பிரிவில் முதல் முறையாக அரசினால் 1975 ஆம் ஆண்டில் நடன ஆசிரியைகள் நியமிக்கப்பட்டபோது- நியமிக்கப்பட்ட ஐவரில் ராகினியும் ஒருவர். பத்தாண்டுகள் அங்கு நடன ஆசிரியையாக இளவாலை, மானிப்பாய், நீர்கொழும்பு, வவுனியா என்று பல்வேறு பகுதிகளில் பணியாற்றிய பின்னரே, பத்திரிகையாளரான தன் கணவருக்கு ஏற்பட்ட 'நெருக்குதல்'களினால் குடும்பத்தோடு லண்டன் வந்து சேர்ந்தார்.

'நாட்டியாலயா' நிறுவனத்தின் பணியை இங்கும் ஆரவாரமில்லாமல்தொடர்ந்து ஆற்றி வரும் ராகினிக்கு தனித்துவமான சிறப்புகள் உண்டு.
லண்டனில் Tooting இல் உள்ள அரசாங்க பாடசாலையான Franciscan Primary schoolஇல் முழு நேர நடன ஆசிரியையாகப் பணியாற்றுகிறார்.
வயதானவர்ளுக்கான மாலை நேர வகுப்புகள் நடத்தப்படும் South Thames college இல் இந்திய நடனம் பயிற்றுவிக்கும் பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமையாற்றுகிறார்.
லண்டனில் பல நடன அரங்கேற்றங்களை நடத்தியுள்ள இவர் அயல்நாடான ஜெர்மனியில் வாழும் தன் இரு மாணவிகளை அங்கேயே அரங்கேற்றம் செய்திருப்பது இவர் ஆற்றலின் வெளிப்பாடு.

நூறுக்கு மேலான குழந்தைகள் இவரது 'நாட்டியாலயா' நிறுவனத்தில் பயில்கிறார்கள்.
ஐரோப்பிய நாடுகளில் நடக்கும் பரத நாட்டிய நிகழ்ச்சிகள்- அரங்கேற்றங்கள் போன்ற நிகழ்வுகளுக்கு பிரதம அதிதியாக அழைத்துக் கௌரவிக்கப்படுகிறார். ஆனாலும் இவரிடம் உள்ள பணிவே இவரை வேறுபடுத்தி உயர்த்துகிறது.

ராகினி ராஜகோபாலின் 'நாட்டியாலயா' ஐரோப்பாவில் இப்போது புகழ் பெற்ற தனித்துவம் மிக்க நிறுவனமாகத் திகழ்கிறது.

# தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் பற்றி...

தொடர்ந்த நாடக மேடையேற்றங்களே தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும் என்ற கோஷத்துடன் எழுபதுகளில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம். தீவிர நாடகத்துறையில் ஈழத்திலும் சரி, தமிழகத்திலும் சரி கடந்த கால் நூற்றாண்டு காலமாக தொடர்ந்து இயங்கி வரும் ஒரே அரங்க அமைப்பு இது. தீவிர நாடகங்களுக்கு ஆயிரக்கணக்கான பார்வையாளர்களைத் திரட்ட முடியும் என்று எழுபதுகளில் நிரூபித்து இலங்கையின் பலபாகங்களிலும் தீவிர நாடகங்களை நிகழ்த்தி, பின்னர் தமிழர் வாழும் ஐரோப்பிய நாடுகள், கனடா, ஒஸ்ரேலியா போன்ற நாடுகளிலும் நாடக விழாக்களை வெற்றிகரமாக நடாத்திவரும் கழகம் இது. பார்வையாளர்களுக்காக சமரசம் செய்து கொள்ளாமல் தமது அரங்கம் குறித்த கொள்கையுடன் முற்று முழுக்க தன்னார்வத் தொண்டர்களையும் தமிழ் மக்களையுமே நம்பி, எந்தவித அரச உதவியோ, பெரும் அரசியல் அமைப்புகளின் ஆதரவோ இன்றி, சகல தமிழர் வாழும் நாடுகளிலும் வேர் பரப்பியிருக்கும் இக்கழகத்தின் சாதனை ஒரு அசுர சாதனை என்றுதான் கூறவேண்டும்.

அரங்கின் பல்வேறு சாத்தியப்படுகளைப் பரீட்சித்துப் பார்க்கும் வகையில், உள்ளடக்கத்திலும் அழகியல் ரீதியிலும் அரங்கின் பல்வேறு பரிமாணங்களையும் வெளிப்படுத்தும் நாடகங்களை ஆரம்ப காலத்தில் இருந்து இன்று வரை வெற்றிகரமாக நிகழ்த்தி வருகிறது தமிழ் அவைக்காற்று கலைக்கழகம். சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களைத் தயாரித்து பல நூறு தடவைகள் மேடையேற்றிய அனுபவம் கொண்டது இக்கழகம்.

காத்திரமான புகழ் பெற்ற நாடகாசிரியர்களின் பிரதிகளுக்கு நாடக அரங்கில் மேடை வடிவம் அமைத்து எமது நாடக ரசிகர்களின் நாடகப் பிரக்ஞையை, ரசிக மட்டத்தை உயர்த்துவதில் இவர்கள் பணி குறிப்பிடத்தக்கது. அறிவார்ந்த தளத்தில் நாடகம் குறித்த சர்ச்சைகளை உருவாக்கியிருக்கிறது. மனித நேயத்துடன் மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் மனித முரண்பாடுகளையும், அதே நேரம் ஈழத் தமிழரின் இருப்பின் இழப்பையும் வெளிப்படுத்தும் இவர்களது அரங்க அளிக்கைகள், காலத்துடன் ஒட்டியிருப்பதனால் எங்கும் வரவேற்பைப் பெறுவதில் ஆச்சரியமில்லை. ஒலி, ஒளி நிறம் இசை யாவும் நாடகப் பிரதியின் தொனிக்கு ஏற்ப ஒரு லயத்துடன் இவர்களின் நாடகங்களில் இடம் பெறுகின்றன. இந்நாடகங்களில் பல்வேறு திறமைகள் ஒருங்கிணைந்து ஒரு உன்னத கலா அனுபவமாகும் இவர்கள் தற்போது சிறுவர்களைக் கொண்டு தயாரிக்கும் நாடகங்கள் லண்டன் மேடைகளில் அதிக கவனிப்பைப் பெற்று வருகின்றன.

***************



எமது பாடசாலையின் பழைய மாணவனாகிய நான் இன்று இங்கிலாந்தில் டாக்டராக (Obstertician & Gynaecologist) பணியாற்றி வருகிறேன். எனக்கு ஆரம்ப காலத்தில் கல்வி பயிற்றுவித்த எல்லா ஆசிரியர்களுக்கும், இடமளித்த எனது பாடசாலைக்கும், பிறந்த மண்ணுக்கும், என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்கும் எனது சிரம் தாழ்ந்த நன்றிகள் உரித்தாக.
எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் ஒன்றுகூடி இந்த விழாவையும் மலர் வெளியீட்டையும் ஒழுங்கு செய்து இந்த மலரில் எனக்கு ஒரு இடமளித்த எல்லோருக்கும் நன்றி.

# புற்று நோயில் இருந்து தப்புவதற்கு சில வழிகள்

எமது நாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் புற்று நோயினால் மடிகிறார்கள். புற்று நோய்க்கு தீர்க்கமான மருந்துகள் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. இந்த கொடிய நோயை களையிலேயே களைந்து விட்டால் ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களை காப்பாற்ற முடியும்.
நான் மருத்துவக் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில் மகரகமையில் உள்ள புற்றுநோய் வைத்திய சாலைக்கு பல தடவை போய் வந்தேன். அங்கு புற்று நோயால் துன்புறும் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் எல்லோரையும் கண்டு மிகவும் வேதனைப்பட்ட நாட்கள்பல. புற்றுநோய் வருவது மனிதனுக்கு ஒரு சாவுமணி போன்றது. இதனால் பீடிக்கப் பட்டவர்களில் ஒரு சிலர் மட்டுமே உயிர் தப்பி வாழ்ந்திருக்கிறார்கள்.
சிறுபிள்ளையாக இருக்கும் போது படித்த ஒரு கதை இப்பொழுது எனக்கு ஞாபகம் வருகிறது. வருமுன் காப்பேன், வரும்போது காப்போன், வந்தபின் காப்போன் என்று மீன்களை வைத்த ஒரு கதை. இதில் வந்தபின் காப்போன் என்று இருந்த மீன் அநிநாயமாக கொல்லப்பட்டது. இது போல்த் தான் நமது வாழ்க்கையும் இந்தக் கொடிய நோயில் இருந்து எம்மை வருமுன் காப்பது முக்கியம். இத எமது நடைமுறை, அன்றாட வாழ்க்கையைப் பொறுத்தது.
வரும்போது காப்பது இதனைப் பற்றித் தான் நான் இங்கு எழுத முன் வந்தேன். எனென்றால் வந்தபின் காப்பதற்கு முக்கியமாக எமது நாட்டில் இருக்கும் மருத்துவ வசதிகள் போதாது.
புற்றுநோய் உடம்பில் எல்லா இடங்களிலும் வரலாம். ஆனால் பெண்களைப் பொறுத்தவரை கருப்பை (Uterus) கருப்பை வாசல் (Cervix) யோனிமடல் (Vulva) யோனிமடி (Vagina) சூல் வித்தகம் (Ovary) இவற்றில் இருந்து வரும் புற்றுநோய்குரிய குணம் குறிகள் பலவருடங்களுக்கு தென்படும். இவற்றை ஆரம்பத்திலேயே இலகுவாக பெண்களால்

கண்டுபிடிக்க முடியும். இவற்றை ஆரம்பத்திலேயே ஒழிவு மறைவு இன்றி வெட்கப்படமால், மருத்துவர்கள் தாதிகள் போன்றவர்களிடம் கூறினால் அவர்கள் இதற்கு தேவையான வழிவகைகளை சொல்லுவார்கள்.

## முக்கியமான குணம் குறி (Symptoms)

வழக்கத்துக்கு மாறான இரத்தப் போக்கு (மாதவிடாய்) (Irregural Bleeding) அடிக்கடி வரும் நீர்வடிதல் (Discharge) சீதம், சளி, வெள்ளைபடுதல் வயிற்றுவீக்கம், பசியின்மை, மெலிவு, நிறைகுறைதல், மூச்சுவிட முடியாமை, மாதவிடாய்க்கு இடையில் வரும் இரத்தப் போக்கு (Inter menstrual bleeding) உடல் உறவின் பின்னர் வரும் இரத்தப் போக்கு சொறிவு, அரிப்பு இவையே முக்கியமான அறிகுறிகள் ஆகும். மாதவிடாய் நின்று ஒரு வருடத்துக்குப் பின்னர் வரும் இரத்தப் போக்கு முக்கியமான தொன்றாகும் (Post menopausal bleeding) சர்க்கரை வியாதி (Diabetes) இரத்த அமுக்கம் (Hypertension) (High Blood pressure) பிள்ளையில்லாமை, பிந்திவரும் மாதவிடாய் நிறுத்தம், (Late menopause obesity) சேர்க்கையான ஓமோன் மருந்துகள் (Hormone replacement therapy) எடுப்பவர்கள் போன்றவர்களுக்கும் கருப்பையில் புற்றுநோய் வர சாத்தியங்கள் கூட.

இவற்றைவிட உடம்பில் முக்கியமாக, வாய், தொண்டை, நாக்கு, இரப்பை, மூளை உணவுக் குழாய் குடல், சுவாசப்பை, சிறுநீர்ப்பை போன்ற இடங்களில் வரும் புற்றுநோய்கள், மனிதர்களின் நாளாந்த வாழ்க்கை முறையால் உண்டாகின்றன. அடிக்கடி வெற்றிலை போடுதல், சுண்ணாம்பு, புலையிலை பாவித்தல், சூடான தேனீர், கோப்பி அருந்துதல், கூடிய காரமான உணவுகள், புகைப் பிடித்தல், போன்றவை புற்றுநோய்க்குரிய காரணிகளாகும். இவற்றை தவிர்ப்பது முக்கியமான ஒன்றாகும். இவற்றைவிட வாயில் வரும் புண்கள், நோவு, இரத்தப் போக்கு விழுங்க முடியாமை பசியின்மை, உடம்பு மெலிவு, சோர்வு, களைப்பு, மலக்கடுப்பு வயிற்றோட்டம், வயிற்று நோவு, வயிற்று வீக்கம் மஞ்சள் காமாலை, மரத்துடன் இரத்தம் போதல் சிறுநீருடன் இரத்தம் போதல் சிறுநீர் களிக்கும் போது ஏற்படும் நோவு, சிறிய அளவில் சிறுநீர் கழித்தல் போன்றவை, புற்று நோக்குரிய சில அறிகுறிகளாகும். அடிக்கடி மூக்கில் இருந்து இரத்தம் போதல் சில சமயங்களில் Blood cancer க்கு (Leukaemia) ஒரு அறிகுறியாகும். மேலே கூறப்பட்ட அறிகுறிகள் தென்படும் போது மக்கள் இவற்றை உதாசினப்படுத்தாமல் டாக்டர்களிடம் கூறி தேவையான பரிசோதனைகளை செய்வித்து அதற்கான சிகிச்சைகளை முன்கூட்டியே பெறவேண்டும்.

புற்றுநோய் திடீர் என்று வரவதில்லை. இதற்க பல வருடங்கள் எடுக்கும். இதற்கான குணம் குறிகள் முன்கூட்டியே எமது உடம்பில் தென்படும். இந்த நேரத்தில் மருத்துவ உதவிகளை நாடிச் சென்றால் புற்று நோயை ஆரம்பத்திலேயே அகற்றி விடலாம். புற்று நோய் ஒரு கொடிய வியாதி இந்த நோய் வந்தால் மனிதர்கள் நீண்ட நாள் உயிர் வாழ முடியாது.

எமது நாட்டில் மருத்துவ வசதியில்லாமை எமது மக்களுக்கு ஒரு பெரும்

குறையாக இருக்கிறது. வெளிநாடுகளில் அமைக்கப்பட்ட மருத்துவ வசதிகள் போல் எமது நாட்டிலும் அமைக்கப்பட வேண்டும்.
எமது மக்களுக்கு (Health Education) சுகாதார அமைச்சினால் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட வேண்டும்.
டாக்டர்கள், தாதிகள், மருத்துவிச்சிகள் சுகாதார அதிகாரிகள் பலர் உருவாக்கப்பட வேண்டும். பரவலாக்கப்பட்ட சுகாதார வசதிகள் எமது கிராமங்களுக்குள் அமைக்கப்பட வேண்டும்.

## CERVICAL CANCER SEREENING PROGRAMME

கருப்பை வாசலில் வரும் புற்று நோயால் பல லட்சக்கணக்கான பெண்கள் ஒவ்வொரு வருடமும் பாதிக்கப்படுகிறார்கள். இதனைத் தடுக்க நாற்பது வருடங்களுக்கு முன் வெளிநாடுகளில் இந்த பரிசோதனை தொடக்கி வைக்கப்பட்டது. இப்பரிசோதனை மூன்று வருடத்துக்கு ஒரு மறை செய்யப்படுகிறது. 25 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட பெண்கள் இப்பரிசோதனையை செய்விக்க வேண்டும்.
இப்பரிசோதனைக்கு ஒரு சில நிமிடங்களே எடுக்கும். டாக்டர்கள் தாதிமார், மருத்துவிச்சிகள் இப்பரிசோதனைகளைச் செய்யலாம். இப்பரிசோதனையின் போது பாதிக்கப்பட்ட கலங்களை (abnormal cells) நுணுக்குக் காட்டி மூலம் கண்டு பிடிக்கலாம். இந்த மாற்றம் உள்ளவர்களுக்கு இரண்டாவது பரிசோதனையின் போது (Colpos-copy) (Biopsy) செய்யப்படும். இதன் முடிவுகளைப் பொறுத்து இதற்கான வைத்தியத்தை டாக்டர்கள் செய்வார்கள். (Laser/Loop cone Biopsy/Cauterisation/ Cone Biopsy) இந்த சிகிச்சை முறைகளால் ஆரம்பத்திலேயே, பாதிக்கப்பட்ட இடத்தை முழுமையாக கற்றி விடலாம். புற்றுநோய் மேலும் பரவியிருந்தால் முன்கூட்டியே (Hysterectomy) செய்து கருப்பையை எடுத்துவிடலாம். இதனால் புற்று நோய் மற்ற இடங்களுக்கு பரவாமல் தடுக்கலாம். இதற்கு மேலும் வயிற்றில் புற்றுநோய் பரவியிருந்தால் (Radiotherapy) x ray கதிர்வீச்சு செய்து பரவலைத் தடுக்கலாம். இந்த வசதி இலங்கையில் மகரகமையிலும் தெல்லிப்பழையிலும் தான் இருக்கின்றன. எமது நாட்டில் இது போன்ற வைத்தியசாலைகள் பல அமைக்கப்பட வேண்டும். இலங்கையில் (Radiotherapy) Xray கதிர் வீச்சு சிகிச்சைக்காக வருடக்கணக்கில் காத்திருந்து இறப்பவர்கள் பலர். Xray கதிர்வீச்சு (Radiotheraphy) ஆரம்பத்திலேயே கொடுத்தால் நோயாளிகளை சில காலம் உயிருடன் வாழ வைக்கலாம், நீண்ட காலம் உடல் ஆரோக்கியத்துடன் வாழலாம்.

PREVENTION IS BETTER THAN CURE

வருமுன் காப்பது அவசியம்
வரும்போது காத்தால், நீண்டகாலம் வாழலாம்
"நோய்நாடி — நோய் முதல் நாடி— அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்"

Dr.Poothathamby Rasiah - (M.B.B.S)
**SPECIALIST IN OBSTERICS & GYNAECOLOGY)**



## அந்தவோர் வார்த்தை போதும்....
### - கவிஞர் கந்தையா இராஜமனோகரன்

நெஞ்சத்தில் அன்புபூண்டு நேர்மையே நெறியாய்க் கொண்டு
பஞ்சத்தில் வாழ்ந்தாற் கூடப் பாரிலே சிறக்க முடியும்!
மஞ்சத்திற் பெண்ணை வைத்தும் மனத்தினை அளிக்காவிட்டால்
கொஞ்சத்தான் இயலுமாமோ கோதைமேல் அன்பெங்காமோ?

என்னையே தந்தேன் உனக்கு என்றுமே பகர்ந்து என்றும்
சொன்னதே செய்துநின்றாற் சொர்க்கமும் இங்குதானே!
தன்னையே கொடுத்தல்இன்பத் தகுதிக்கு மட்டுமன்று
என்னையே தந்தேன் என்னல் எதற்குமே சிறப்புஈனும்!!

அந்தவோர் வார்த்தைபோதும் அகிலத்தை வெல்லுமாமே!
எந்தவோர் பொருளுக்காயும் எம்மைநாம் இழப்போமாயின்
அந்தவோர் பொருளும்எமதாய் ஆகுமே ஆடையாகக்
கந்தையை உடுத்தாற் கூடக் காசினி ஆளலாமே!!

எந்தவோர் நன்மைக்காயும் எவருடைய வாழ்வுக்காயும்
சிந்தையில் ஒன்றேயாகும் சிறப்பினை நாமும் பெற்றுத்
தந்துமே எல்லாமிங்கு தற்கொடை புரிவோம் என்றால்
அந்தவோர் வார்த்தைபோதும் அகிலத்தை ஆளலாமே!

# ஒப்பற்ற ஆசான் அமரர் க.சங்கரசிவம்

அமரர் க.சங்கரசிவம் ஆசிரியர் அவர்களை இம் மலரினூடாக நினைவு கூர்வதில் மன நிறைவடைகிறேன். இவரை நினைக்கும் போதெல்லாம் பள்ளிப்பருவத்தில் துள்ளித் திரிந்த இளமைக் காலங்கள் நினைவுகளை தொடும். சில வருடங்களாக எனது வகுப்பாசிரியராக தொடர்ந்து கடமையாற்றிய இவர் நான் கண்ட மாணிக்க மனிதர்களுள் ஒருவர். சகல மாணவர்களையும் ஒரு மனதோடு நோக்கும் இவர் பணி மகத்தானது. பாரபட்சமின்றி மாணவர்களை வழி நடத்தும் இவர் பணி சிறப்பானது. இவரது மனதில் மாணவர்கள் எவ்வாறு நிலைத்திருந்தார்களோ அவ்வாறே இவரிடம் கற்ற மாணவர்கள் மனதில் இவர் என்றும் நிலைத்திருப்பார். இவர் ஒரு சிறந்த சேவையாளர், சமூகப்பற்றாளர், இறை பக்தி மிக்கவர் ஆவார். சங்கீத பூஷணம், மிருதங்க வித்துவான் ஆகிய இரு பட்டங்களை தன்னகத்தே கொண்ட இவர் எமது பாடசாலைக் கீதத்தை இயற்றி பாடிய பெருமைக்குரியவர். நீண்ட காலம் எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய இவர் திடீரென எம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டார். பாடசாலைச் சமூகம் கதறி அழுதது. இவரிடம் பயின்ற மாணவர்கள் ஓலமிட்டனர். சங்கரசிவம் ஆசிரியர் அமரத்துவம் அடைந்து விட்டார் என்ற செய்தி யாழ்ப்பாண மண்ணை வியப்பில் ஆழ்த்தியது. குறிப்பாக இசைச் சமூகம் மிகுந்த வேதனையடைந்தது. 'இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இசை முன்னோடிகள்" என்ற நூலில் இருந்து சங்கரசிவம் ஆசிரியர் பற்றிய குறிப்புக்களை இங்கு சமர்ப்பிக்கின்றேன்.

—ஆசிரியர்—

## இணுவில் – கே. சங்கரசிவம்
## மிருதங்கம் (*1939 — 1988*)

மிருதங்க வித்துவான் சங்கரசிவம் அவர்கள் இசைக் கலைஞர்கள் பொதிந்து வாழும் இணுவையூரில் கந்தையா என்பவரின் புதல்வராக 15.06.1939 இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை 1944 முதல் க.பொ.த வரையும் இணுவில் சைவப்பிரகாச வித்தியாலத்தில் 1956 வரை பயின்றார். இதன் பயனாக இவர் ஓர் உதவி ஆசிரியராக 1960ஆம் ஆண்டு அரசாங்கப் படசாலையில் நியமனம் பெற்றுக் கடமைபுரிந்தார். இக்காலத்திலேயே மிருதங்கம் பயிலவும் ஆரம்பித்தார். இவருடைய ஆரம்பக் குரு காலஞ்சென்ற மிருதங்க வித்துவான் திரு அம்பலவாணர் ஆவார். இவர் பிரத்தியேகமாக இப்பயிற்சியை மிருதங்க

வித்துவான்களான ப.சின்னராஜா, ஏ.எஸ் ராமநாதன், எம்.என். செல்லத்துரை ஆகியோர்களிடமும் விசேடமாகப் பயின்றார். இது மட்டுமன்றி வாய்ப்பாட்டு இசையினையும் சங்கீத பூஷணம் எஸ்.பாலசிங்கம் அவர்களிடம் பயின்றார்.

திரு.சங்கரசிவத்தின் மிருதங்க அரங்கேற்றம் 1972ஆம் ஆண்டு நடைபெற்றது. இவர் இக்காலங்களிலேயே வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்கும் தோற்றி 1976ஆம் ஆண்டு மிருதங்க ஆசிரியர் தராதரம் பெற்றார். தொடர்ந்தும் மிருதங்கக்கலையில் மாணவர்களைத் தயார் செய்வதில் தனக்கென ஒரு முறையை அமைத்துக் கொண்டவர். மேலும் இவர்ஏனைய மிருதங்கக் கலைஞர்களை வயதிற் சிறியோராயிருப்பினும் மதிக்கும் தன்மையுடையவராகவும் இருந்தார். அத்துடன் தனக்கு இக்கலையிலுள்ள சந்தேகங்களையும் ஏனையவர்களுடன் விளங்கிப் புரிந்து கொள்ளும் பண்புடையவர். இவருடைய மிருதங்க வாசிப்பு பாடகர்களுக்கோ, வாத்தியக் கலைஞர்களுக்கோ இடையூறு இன்றியதாக இருக்கும். இவர் மற்றக் கலைஞர்களுடன் பழகும் விதமும் மிகுதியான பண்புடையது.

இவர் கலைச் சேவை பெரும்பாலும் வட இலங்கை சங்கீத சபையின் மிருதங்கப் பரீட்சைகளுக்க மிகுதியாகப் பயன்பட்டது. 1977 தொடக்கம் 1988 வரை செயன்முறைப் பரீட்சகராகவும், வினாப்பத்திரம் தயாரிப்பாளராகவும், மீளாய்வுக் குழுவினராகவும், பங்கு கொண்டவர். இவரது கலைத்தொண்டில் விசேடமானது 1979ஆம் ஆண்டு “மிருதங்க சுருக்க விளக்கம்” என்னும் நூல் வெளியிட்டமையாகும். மிருதங்க சங்கீதத்திற்கான நூல்கள் இந்தியாவில் சரி இலங்கையில் சரி வெளியிடப்பட்டது குறைவு. இந்நிலையில் இவருடைய மிருதங்க சுருக்க விளக்கம் என்னும் சிறிய நூலானது வெளியிடப்பட்டது நல்ல அம்சமாகும்.

இவருடைய கலைச்சேவை வாழ்க்கையானது துரதிஸ்டவசமாக நீடித்து விளங்காது போயிற்று. திடீரென இவருக்கு ஏற்பட்ட ஜுரம் இவரை இசையுலகிலிருந்து 17.5.1988 அன்று நள்ளிரவே நிலையுலகிற்கு பிரித்துச் சென்றது. கலையுலகில் பெயர் நிறுத்திய சங்கரசிவத்தின் நல்ல அம்சங்கள் என்றும் வாழக் கூடியன.

************

*புலம்பெயர்ந்து வாழும் தமிழர் வாழ்வில்*
*'புதினம்' இலவச இதழ்*
*ஓர் அங்கமாகிவிட்டது*

**புதினம்**
**PUTHINAM**

லண்டன் தமிழரின் இதய ராகம்

முழுமையான பத்திரிகை
அனுபவம் பளிச்சிடுகிறது.
விளம்பரங்களைத் தனித்துமுள்ளதாக
நோக்குகிறார்கள் வாசகர்கள்.

வாசகர்கள்- எழுத்தாளர்கள்- விளம்பரதாரர்கள் தொடர்புகளுக்கு:
**PUTHINAM**, 38, Moffat Road, London SW17 7EZ
Tel: 020 8767 8004 Fax: 020 8 767 7866
e-mail: raj @ ekrpublishers. freeserve. co.uk.

# GLENMORE
## PROPERTY SERVICES LTD

**sales**

**lettings**

**management**

**mortgage advice**

எல்லாவித மோட்கேஜ்களும் செய்து தரப்படும்.

**You have tried the rest now come to the best.**

**810 Harrow Road, Wembley**
**Middlesex HA0 3EL.**
**Tel: 020 8904 5040**
**Fax: 020 8904 5220**

website: http;//www.glenmore properties.co.uk
e-mile: rightmore@glenmore properties.co.uk

Members of
The National Association of Estate Agents

NATIONAL ASSOCIATION
NAEA
ESTATE AGENTS

Your home is at risk if you do not keep up repayment on a mortgage or other loan(s) secured on it.

# …SON
## …AGENTS LTD

…TTING & MANAGEMENT, VALUERS
…NANCIAL SERVICES, COMMERCIAL

- SALES
- LETTING
- MANAGEMENT
- COMMERCIAL
- MORTGAGE ADVICE

We are highly motivated and we guarantee perfect results within days for your property matters, whether **selling** your property or **finding** a property for you it's a simple matter for Wilson Estate Agents. **Letting** your property privately can be headache, letting your property through Wilson Estate Agents will give you peace of mind. We can also provide legal advice to help you along the way. Problem finding a **mortgage** let us help you the right one for your needs. Problem cases also considered.

**CHOOSE WILSON ESTATE AGENTS FOR ALL YOUR PROPERTY NEEDS WE SATISFY THEM**

e-mail: info@wilsonestate.co.uk
website: www.wilsonestate.co.uk.

THE NATIONAL ASSOCIATION OF ESTATE AGENTS NAEA

**383, Northolt Road,**
**South Harrow,**
**Middlesex HA2 8JD.**

**Tel: 020 8426 7100 Fax: 020 8426 7500**

# PA

# PHOTOGRA





உங்கள் வாழ்வில் நிகழும் மங்களகரமான வைபவங்களை இன்றைய புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி பல வருட அனுபவமுள்ள தேர்ச்சி பெற்ற படப்பிடிப்பாளர்களினால் புகைப்படம் பிடிக்கவும். வீடியோ படமாக்கவும் நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான நிறுவனம்.



## PARA PHOTOGRAPHY
## VIDEO MOVIES



உங்கள் விருப்பத்திற்கேற்ப புகைப்படம் பிடித்து அல்பத்தில் சிறப்பாக தொகுத்து தரப்படும்.

**பலவருட அனுபவமே வெற்றியின் ரகசியம்.**
**உங்கள் தேவையே எங்கள் சேவை.**

தொடர்புகட்கு:

## PARA PHOTOGRAPHY

**Tel: 020 8422 5610 / 020 8922 3409**

**Mobile: 07939 115387 / 079 3272 3137**

ர் நகைமாளிகை

Jewellers



**Creates the New Woman**

Specialist in 22 ct. Gold Jewellery

230 UPPER TOOTING ROAD,
LONDON SW17 7EW

**Tel : 0181 767 3445**

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

*With Best Complim*

NAT

SOLIC

**WE WORK FOR YOUR INTER**

*Contact us for PROMPT and PROPER service in all LEGAL matters including Immigration and Conveyancing (Domestic & Commercial)*

Legal Aid


*Legal Aid Work Undertaken*

Partners: K. Chelva-Nayagam LLB,
T. Sri Pathma Nathan

**169 TOOTING HIGH STREET**
**TOOTING**
**LONDON SW17 0SY**
**Tel: 0208 672 1800**
**Fax: 0208 672 0105**

...த தேவையான

...ன். மீன்கள், குளிரூட்டிய மீன்கள் *



அனைத்து இறைச்சி வகைகளும் *
(ஆட்டிறைச்சி பங்குகளாக)

மரக்கறி வகைகள் *

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் *

VIDEO CD, AUDIO CD, DVD, VHS *

மற்றும் அனைத்துப் பொருட்களும் *

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இங்கிலாந்தின் மிகப்பெரிய இலங்கைப் பொருட்களின் களஞ்சியம்.

# MILLENNIUM

## SUPER STORES

364 - 366, BATH ROAD,
HOUNSLOW, MIDDX TW4 7HT, ENGLAND.
TEL: 020 8572 2323 FAX: 020 8572 5209

# MANAGEMENT COMMITTEE - 1997-2000
# KAMPARMALAI SCHOOL ALUMNI ASSOCIATION



**Seated:** (L-R) Dr.P.Rasaiah (Treasurer), Mr.R.Ragunathan (President), Mr.S.Thurairajah (Patron), Mrs.R.Thu[illegible] n),
Mrs.K.Niththiyananthan, **standing (L-R):** Mr.M.Suthakaran (Programme Organiser) , Mr.R.Prab[illegible] iser),
Mr.V.Shanmuganathan (Sports Secretary), Mr.M.Paranthaman, Mr.S.Gunesalingam (Asst.Secretary), Mr.A.Ra[illegible]
**Absence:** Mr.S.Ganesalingam, Mr.T.Puvaneswaran, Mr.T.Srimurthy, Mr.R.Balendran, Mr.U.Perinparaj,, Mr. [illegible] iyagalingam.

# MORTGAGE PLUS

## The Right Choice

மோட்கேஜ் பிளஸ்
த றையிட் செயிஸ்



FOR ALL YOUR MORTGAGE & REMORTGAGE REQUIREMENTS AT VERY COMPETITIVE RATES

PLEASE CONTACT:
SURJIT S. KAUL

## TEL: 020 8571 2570

**FAX: 020 8893 6796, Mobile: 0410 150 713**

**We Specialise in:**

* Mortgages
* Remortgages
* Difficult Mortgages
* Secured Loans
* Unlimited County
* Court Judgements / Defaults

You've tried the rest, now try the best.

**81, SOUTH ROAD, SOUTHALL, MIDDX UB1 1SQ.**

**TEL: 020 8571 2570 Fax: 020 8893 6796**

**Mobile: 0410-150-713**

Your home is at risk if you do not keep up repayments on a mortgage or other loan secured on it.

# M.K.SRI & CO.

## SOLICITORS
&
## ADMINISTRATORS OF OATHS

**2C, FAIRHOLME ROAD (OFF STATION ROAD)**
**HARROW, MIDDLESEX, HA1 2TN**

**Tel: 020 8515 7000 (4lines)**
**Fax: 020 8515 7030**
**Fax: 020 8515 7031 (For Conveyancing only)**
**DX: 133196 Harrow (4)**

**We specialise in**

* IMMIGRATION
* CONVEYANCING
* TRAFFIC OFFENCES
* CRIME
* MATRIMONIAL
* STATE BENEFITS

* ADVICE & ASSISTANCE AT POLICE STATION

***LEGAL AID WORK UNDERTAKEN***

**PRINCIPAL:** M.K. SRITHARAN

**ASSISTANT SOLICITORS:**
S. RAVINDRAN
S.SIVASANTHIRAN
C.SOMASUNDARAM
K.RAVEENDERAN

**TRAINEE SOLICITORS:**
VIJAYA RATNAM
SUSAN SIVAPALAN

இங்கிலாந்து தேசத்தில் ஆசியநாட்டவர்களின் மிகப் பெரிய சொலிசிற்றர் நிறுவனமாக லண்டன் - ரூட்டிங்கில் திகழும்

திரு. ராஜா தவராஜாவின்

# ராஜா அன் கோ

குற்றவியல் வழக்குகளில் நிபுணத்துவமும் அதிகப்படியான வழககுகளில் வெற்றியும் அகதிகள் வழக்குகளில் கூடியளவு வெற்றியும் பெற்ற நிபுணர்கள் கொண்ட சட்ட நிறுவனம்

**Recognised by the Legal Aid Board as provider of quality legal services**

# RAJA & CO

**SOLICITORS**

Administrators of Oaths

**THE LARGEST ASIAN LAW FIRM IN THE UK**

We have expert in every field of law
who speak all Asian Languages.
Immigration – We have a very high rate of success
Crime – We have experts with wide experience in criminal law
Matrimonial – Injunctions, Childcare etc.
Civil Litigation
Land Lord and Tenant
Welfare
Conveyancing

# RAJA & CO

**SOLICITORS**

**295 BALHAM HIGH ROAD, LONDON SW17**

(Near Tooting Bec tube Station)

**Tel: 020 8682 2585**
**Fax: 020 8682 2575**

# EASTHAM (Eha) ACCESS

**_Leading advisors & Brokers._**

_(Subscribers to MCCB,NACFB)_

- **Mortgages**
- **Re.Mortgages**
- **Purchase of commercial properties**
- **Home owners loan - fast Services**
- **Purchase of small shops**
- **Purchase of semi.commercial properties**
- **Insurance.Life,Building &contents etc.**

## Contact on:

**Tel : 0208 586 7856,**

**0208 552 6941**

**Fax: 0208 471 3294**



# SATHY ESTATES LIMITED

## Residential Sales And Lettings

**220 High Street**
**Harlesden**
**London NW10 4SY**

**Tel: 020 8961 9613**
**Fax: 020 8961 9614**

LANDLORDS: YOUR RENT IS GUARANTEED, FREE MANAGEMENT SERVICES QUARANTEED RENT 52 WEEKS A YEAR.

SALES : PROPERTIES REQUIRED FOR THE AREAS LISTED BELOW OUR COMMISSION RATES ARE COMPETITIVE WE GIVE A SUBSTANTIAL REDUCTION FOR SOLE AGENCY.

AREAS : LONDON BROUGHT OF BRENT, HARROW, EALING, HAMMERSMITH & FULHAM & WESTMINSTER.

TENANTS : ACCOMMODATION ARRANGED TO SUIT YOUR COMFORT.

PLEASURABLE AND PEACEFUL LIFE IS EVERYBODY'S DREAM THROUGHOUT THEIR LIFE SPAN.
WE DO SELL PROPERTY IN THE COLOMBO AREA IN SRI LANKA.

**FOR MORE DETAILS CONTACT: THIRU**

# Selva & Co

## *Solicitors*

### *Adminstrators of Oaths*

## S.SELVA

**Solicitor**

**203 Kilburn High Road,**
**Kilburn, London NW6 7HY**

**Tel: 020 7328 3330    Fax: 020 7328 3339**

**Mobile: 0956 341 215**

# UN BUILDERS

***All types of commercial & Domestic work Larried out the highest standard***

**Al terations Repairs**
**Brick work**
**Carpentry**
**Tiling**
**Plastering & Multitinishing**
**General maintenance**

அத்திவாரம் முதல் கூரை வரை சகலவிதமான வேலைகளையும் தொழில் நுட்ப முறையுடன் செய்பவர்கள்


தொடர்புகட்கு:

Uma

**07930346185**

# ViVEQ Computers

155, Greenford Road,
Sudbury Hill, Harrow,
Middlesex HA1 3QN.
**Tel: 020 8422 3422**
**Fax: 020 84229229**


* New Computers
* Computer components
* Printers
* Scanners
* Intenet Services

**SALES - UPGRADES - REPAIRS - MAINTENANCE**

* We are happy to give a quote on a custom built systems.
* Selling computers with internet ready multimedia and ready for later updating to satisfy customers requirements and affordable budget.
* Updating old computers to satisfy current system availability.
* Servicing, Trouble shooting and repairing.
* Providing network solutions.

DVD DRIVES AVAILABLE (TO WATCH TAMIL MOVIES)

# JAFFNA HOUSE

*Fully Licensed*
*Sri Lankan and South Indian*
*Restaurant and Takeaway*

**திருமணம் மற்றும் விசேட விருந்துபசார வைபவங்களா?**
**உங்களுக்குத் தேவையான சகல உணவுகளையும் சுத்தமான**
**முறையில் சுவையுடன் பரிமாற காத்திருக்கிறார்கள்.**

ALL PARTIES & WEDDING CATERING
AT SPECIAL DISCOUNT PRICE

VISA & MAJOR CREDIT CARDS ACCEPTED
(MINIMUM £10)

90 High Street, Tooting Broadway
Tooting
London SW17

**Tel: 020 8767 6668**
**020 8672 7786**

# நன்றிக்குரியவர்கள்

அழைப்பை ஏற்று வருகை தந்த பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய கல்வியியலாளர்கள், பத்திரிகையாசிரியர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், இம் மலருக்கு ஆக்கங்கள் வழங்கிய பெருமக்கள், நடன நிகழ்ச்சிகளை வழங்கிய திருமதி. ராகினி ராஜகோபால் மற்றும் அவரது "நாட்டியாலயா" மாணவிகள், நாடக நிகழ்வை வழங்கிய திரு.க. பாலேந்திரா மற்றும் அவரது அவைக்காற்று கலைக்கழக குழுவினர், மற்றும் பிறென்ற் தமிழ்ச் சங்கப் பாடசாலை மாணவர்கள், பட்டிமன்றத்திற்கு தலைமை தாங்கிய கம்வாருதி இ. ஜெயராஜ், வாதங்களில் கலந்து கொண்ட தமிழருவி த.சிவகுமாரன், கவிஞர். க.இராஜமனோகரன், சட்டத்தரணி சு.சிறீகாந்தலிங்கம், ஒலிபரப்பாளர் ச.சிறீரங்கன் ஆகியோர் , ஷ்ருதிலய சங்கமம் இன்னிசை நிகழ்வை வழங்கிய சித்திராலயா குழுவினர், பரிசுக்கிண்ணங்களை அன்பளிப்புச் செய்த CHOICE நிறுவன உரிமையாளர் திரு.அ. ரவீந்திரன், ஐ.பி.ஸி. தமிழ் வானொலி விளம்பரச் செலவை பொறுப்பேற்ற ரூட்டிங் வெஸ்டேன் ஜுவலர்ஸ், சன்றைஸ் வானொலி சிறப்பு நிகழ்ச்சிக்கான செலவை பொறுப்பேற்ற East Ham லக்சுமிஸ் ஜுவலர்ஸ், இந் நிகழ்வை விளம்பரம் செய்த கானக்குயில் வானொலி, சன்றைஸ் வானொலி, ஐ.பி.ஸி. தமிழ் ஆகிய வானொலி நிறுவனங்கள், இந் நிகழ்ச்சியினை விளம்பரப்படுத்திய லண்டன் புதினம், கனடா உதயன், நம்நாடு, தமிழர் தகவல், இலங்கை வீரகேசரி, தினக்குரல், தினகரன் போன்ற பத்திரிகைகள், எல்லாவற்றுக்கும் மேலாக இம்மலர் அச்சேற உதவிக்கரம் நீட்டி விளம்பரங்கள் தந்த வர்த்தக ஸ்தாபனங்கள், இம் மலரினை குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த வாசன் அச்சகத்தினர், ஒலி அமைப்பை சிறப்பாகச் செய்த றைம் சவுண்ட்ஸ் ஸ்தாபனத்தினர், ஒளி அமைப்பை சிறப்பாகச் செய்த க.பாலேந்திரா, மேடை அமைப்பை சிறப்புறச் செய்த க.கிருஷ்ணராஜா, தேவையான நேரத்தில் சிறந்த அறிவுரைகளை வழங்கிய பெரியோர்கள், இவை எல்லாவற்றுக்கும் மேலாக எமக்கு பலவழிகளில் ஒத்துழைப்பு நல்கியதோடு இவ்விழாவின் ஒளிப்பதிவை சிறப்புறச் செய்த மேற்கு லண்டன் சுபாஜினி வீடியோ மூவீஸ் ஸ்தாபனத்தார், இவ் விழாவினை புகைப்படம் பிடித்து உதவிய பரா படப்பிடிப்பாளர் நிகழ்வைத் தொகுத்து வழங்கிய ஸ்ரீமதி. ஆனந்தராணி பாலேந்திரா, தோளோடு தோள் நின்று உழைத்த பழைய மாணவர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள், மற்றும் இங்கு குறிப்பிடத் தவறிய அனைவரும்.

விழா அமைப்பாளர்

பூபாள ராகங்கள் - 2000
பழைய மாணவர் சங்கம்
ஐக்கிய இராச்சிய

# MAYFAIR TRAVELS

*Specialists for*

**USA**
**CANADA**
**AFRICA**
**MIDDLE-EAST**
**AUSTRALIA**
**&**
**EUROPE**

RETAIL AGENT FOR ATOL HOLDERS

MAYFAIR TRAVELS
82, Mitcham Road
London SW17 9NG.

Tel: 020 8767 7775
Fax: 020 8767 5991

# RATHY JEWELLERS
# ரதி ஜுவலர்ஸ்



தங்க நகை டிசைன்களின் சுரங்கம்
ரதி ஜுவலர்ஸ்.
தமிழ் மக்களின் நம்பிக்கையான ஸ்தாபனம்
ரதி ஜுவலர்ஸ் மாத்திரமே.
மணமக்களின் மாற்று மோதிரம் அனைத்து
டிசைன்களிலும் கிடைக்கிறது.
பொன்னுருக்கலுக்கு தேவையான அனைத்து
வசதிகளும் செய்து தருகிறோம்.

## என்றுமே மலிவு விலை

**Opening Hours:**

**Mon - Sat: 10.00am - 6.30pm**
**Sunday : 12.00Noon - 6.30pm**

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

## RATHY JEWELLERS

*28, EALING ROAD, WEMBLEY, MIDDLESEX HA0 4TL.*
*Tel: 020 8903 3063*
*Fax: 020 8903 9711*
*Rathy@jewellers.js.net.Com.uk.*